
# தமிழன்னை கண்ணீர்வடிக்கிருள்


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 75 | தொலை பேசி: 23411 | நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | ஐ. அவ். 11 | சித்திரை 19 (1-5-77) ஞாயிறு | புத்தகம்30 | இதழ் 107

# தலைமகனின் பொன்னுடல் சனிமாலை தகனம்

## கண்ணீர் வெள்ளத்திடையே இலட்சோபலட்ச இதயங்கள்

### தாங்கொணு வேதனையால் துடிக்கிறது தமிழினம்! தலைவர்கள், பொதுமக்கள் சாரிசாரியாக அஞ்சலி!

ஈழத்தமிழ் தேசிய இனத்தின் இதயத்தில் நீக்கமற நிறைந்துள்ள அன்புத் தெய்வமும் தமிழ் பேசும் மக்களின் மீட்சிக்காக கடந்த முப்பது ஆண்டுகளாக பரிசுத்தமான இதயத்தோடு உடல், பொருள், ஆவி, மூன்றையும் அர்ப்பணித்து ஓய்வு ஒழிச்சலின்றி திரிகரணசுத்தியுடன் உழைத்து வந்த தியாக சீலரும், தமிழ்ஈழத் தந்தையும், தமிழ் சமுதாயத்தின் ஈடிணையற்ற தனிப்பெருந் தலைவரும், அரசியல் மாமேதையும், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், தமிழ் தேசிய இனத்தின் விடுதலைக் குரலான 'சுதந்திரன்' ஏட்டின் நிறுவனருமான மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் பொன்னிறப் புனிதத் திருமேனி 30—4—77 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு யாழ்நகரில் அக்கினியோடு சங்கமமாகிறது!

—4-ம் பக்கம் பார்க்க

## "4 கோடி தமிழகத்து மக்களும் வேதனையால் துடிக்கின்றனர்!"

## தமிழகத் தலைவர்கள் இரங்கல்!

'இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒப்புயர்வற்ற தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களின் திடீர் மறைவு எம்மைக் கலங்க வைக்கிறது; ஈழத்தமிழ் மக்கள் தமக்காக தம்வாழ்நாள் முழுவதும் அந்தரங்க சுத்தியுடன் உழைத்து வந்த மாபெரும் தலைவரை இழந்து தவிக்கின்றனர். அவர்களது துயரத்தில் தமிழ் நாட்டின் நாலுகோடி தமிழ் —4-ம் பக்கம் பார்க்க

## முன்னாள் திமுக அமைச்சர் வருகிறார்!

தந்தை செல்வாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்கு தி.மு.க. தலைமையின் சார்பில் தி.மு.க. பிரமுகரும் முன்னாள் அமைச்சருமான பா.உ. சண்முகம் அவர்களையும், ஆர்க்காடு வீராசாமி அவர்களையும் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கிறார். இவர்கள் இருவரும் திருச்சியிலிருந்து பிற்பகல் 2.30க்கு புறப்படும் விமானத்தில் புறப்பட்டு 3.40க்கு யாழ்ப்பாணத்தை வந்தடைகிறார்கள்.

## தனது மரணத்தை மூதறிஞர் முன்கூட்டியே அறிந்திருந்தாரா?

அரசியலில் தீர்க்கதரிசனமாக செயற்பட்டு தமிழினத்தை வழிநடத்தி வந்த மூதறிஞர் தந்தை செல்வா, தமது மரணத்தையும் முன்கூட்டியே அறிந்திருந்தாரா?

கடந்த 23-3-77ல், தெல்லிப்பளையிலுள்ள தனது இல்லத்தில் தவறி விழுந்து தலையில் அடிபட்டு சுமார் 15 நிமிடங்கள் கழித்தே தந்தை செல்வா அறிவு இழந்தார். அறிவு இழப்பதற்கு முன்னர் அவர் தமது மனைவியிடம் பின்வருமாறு கூறியிருந்தார்.

"நான் எனது சமுதாயத்துக்காகவும், குடும்பத்துக்காகவும் செய்யவேண்டிய பணிகளை செய்து முடித்து விட்டேன்; எனது பிள்ளைகளுக்கு சொல்லி அனுப்புங்கள்!"

இதுவே மூதறிஞர் கூறிய கடைசிவார்த்தைகளாகும். இதை திருமதி செல்வா அவர்களே தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதறிஞரின் இளமைப் பருவம்

பண்டைத் தமிழர் பெருநிலமான குமரிக் கண்டம் கிழக்கும் மேற்கும் நீண்டு பரந்துகிடந்த காட்சியை வரலாற்ருளர் கூறுகிருர்கள். மலை என்ற தனித்தமிழ்ச் சொல்லின் வேரில் முளைத்த பண்டை மலாயா நாடு இடைக் காலத்தும் பழந் தமிழ் மன்னர்தம் கொடி பறந்த நாடன்ருே? தமிழகத்தும் ஈழத்தும் இருந்து பிற்காலத்தே தம் பழைய உரிமை கருதி இமயமொத்த தோளுடையார்—எந்தமிழர் மலாயா மண்ணில் குடியேறினர்கள்.

மலாயா நாட்டின் ஓர் அங்கமாக ஈப்போ என்னும் அழகுநகர் விளங்குகிறது. 1898ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதலாம் நாளன்று உதயப் பொழுதிலே ஈப்போ நகர் என்றும் இல்லாத வகையில் பார்ப்போர் மயங்கும்படி தனி அழகைக் கொட்டிற்று. தங்க வண்ணத்தினுல் அடிவானத்திலே கதிரவன் தேன்பந்தல் நிறுவ—பறவை மணிகள் அங்கும் இங்கும் ஆடிய அப்பந்தலின் கீழ் ஈப்போ நகர் பளபளத்தது.

ஈப்போ நகரின் ஒரு பக்கத்தில் அமைந்திருந்த வாடகை வீடு ஒன்றின் சாளரத்து வழியே ஓரிரு பறவைகள் உள்ளே நுழைவதும் வெளிவருவதுமாகஇருந்தன. சிறகு முளைத்த விடுதலைப் பறவைகள் அந்த வீட்டில் விடுதலைப் பெரும் பறவை ஒன்றின் வரவை எதிர்பார்க்கின்றனவா? ஆம்—அதோ... அந்தச் சிட்டுக்கள் திடீரென்றுமகிழ்ச்சியோடுஇசை மீட்டத் தொடங்கிவிட்டனவே!

வாடகை வீட்டின் உட்புறத்தில் சுவரோடு சாய்ந்து உட்கார்ந்திருந்த யாழ்ப்பாணத்தார் ஜேம்ஸ் விசுவநாதன் வேலுப்பிள்ளை புதுமையாக ஏற்பட்ட ஓர் அனுபவத்தில் மெய்மறந்து தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார். ஒன்றுமில்லை அவர் தந்தையாகிவிட்டார்.

'அறம்' பிள்ளையாய் மலர்ந்து உலகத்தில் அழுத முதல் ஓசையை ஈப்போ நகர் மண்ணில் வீசிய இளந் தென்றல் சுமந்து கூத்தாடிற்று.

ஆம், செல்வா பிறந்து விட்டார்!

பொங்கு கண்ணீர் அடிமைகளைக் காப்பாற்றத் தங்க விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுவிட்டது.

## உலகத்தில் ஒரு மகான்

உலகத்தில் ஒரு மகான் காலத்தின் தேவை கருதி உதயமாகிவிட்டான்!

இந்த மானிட தெய்வக் குழந்தையின் பிஞ்சுக் கால்கள் நாளை வளர்ந்து மண்ணை மிதிக்கும்போது, பாவங்கள் மண்ணுக்கடியிலே புதைந்து சருகாய்ப்போகும். முப்பது இலட்சம் ஈழத் தமிழருக்கு மட்டுமா? ஒப்பாரி வைத்தழும் உலகின் நாற்புற அடிமைகளுக்கும் எப்போதும் நம்பிக்கையான ஓர் இனிய ஜீவனின் வருகை அல்லவா இது?

செல்வநாயகம் என்ற சிங்காரக் குழந்தையைத் தன் மணிக் கைகளிலே சுமந்து முத்தமிட்ட களிப்பில் மெய் சிலிர்த்தாள் தாய் ஹேரியட் அன்னம்மா. அவள் உள்ளம் துள்ளிக் குதித்துக் கூத்தாடியது. சந்தன மரத்தைப் பிரசவித்த மலைக் காட்டினைப் போல் பெருமையுற்ருள் அவள். குழந்தையின் ஒளி முகம் 'இது சந்தன மரம் தான்' என்று புதிய பிள்ளையின் சிறப்பை அவளுக்கு எடுத்துக் காட்டிற்று.

தந்தை செல்வாவின் தந்தை ஜேம்ஸ் விசுவநாதன் வேலுப்பிள்ளையாழ்ப்பாணம் தொல்புரத்தைச் சேர்ந்தவர். தெல்லிப்பழை தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து மூளாய்க்குப் பக்கத்தில் உள்ள ஒரு பள்ளியில் கொஞ்சக் காலம் படிப்பித்தவர். தாய் ஹேரியட் அன்னம்மா தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். அன்பும் அறமுமே வாழ்வாகக் கொண்ட கிறித்துவம் அவர்களுடைய சமயமாக இருந்தது. ஈழத்தில் இருந்து மனைவியையும் அழைத்துக்கொண்டு மலாயா சென்ற வேலுப்பிள்ளை ஈப்போவில் ஒப்பந்த வேலைகள் செய்வதைத் தொழிலாகக் கொண்டிருந்தார். அந்த நாட்களில்தான் அன்னம்மாவின் மணிவயிற்றில் குழந்தையாகி மலர்ந்தார் செல்வா.

பிறப்பு என்பது இறைவனின் திட்டப்படி நிகழ்வது. கோடி விண்மீன்களை அன்றூடம் வானில் நிறுத்தி வைத்திருக்கும் இறைவன் ஏதோ ஒரு நோக்கோடு எப்போதாவது ஒருநாள் 'பெரிய வெள்ளி ஒன்றை வானத்துக்கு அனுப்பி உலகத்தை வியப்பில் ஆழ்த்தி விடுகிருன்

ஈப்போ நகரில், அந்த வாடகை வீட்டிலே...சின்னஞ்சிறு படுக்கையொன்றில் 'செல்வா' என்ற வெள்ளிக் குழந்தை பொன்னின் மேனியோடு பிரகாசித்துக் கிடந்தது. மலரினும் இனிய இதழ்கள் களங்கமின்றி விரிந்து பிள்ளைச் சிரிப்பாக அவிழ ... அந்தக் குழந்தை கைகளையும் கால்களையும் அசைத்துக் கன்னங் குழியச் சிரித்தது!

## தைப்பிங் வாழ்க்கை

செல்வா பிறந்து சில திங்கள் கழிந்தன. வேலுப்பிள்ளை குடும்பத்தினர் ஈப்போவை நீங்கி மலாயாவில் உள்ள தைப்பிங் என்னும் பிறிதொரு நகரில் குடியேறினர்கள். மூன்று ஆண்டுகள் கழித்து 1901ஆம் ஆண்டு ஹேரியட் அன்னம்மா மற்ருேர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஏணஸ்ட் வேலுப்பிள்ளை பொன்னுத்துரை என்று அவனுக்குப் பெயர் வைத்தார்கள்.



1902ம் ஆண்டில் கடைசிப் பிள்ளையும் பிறந்தான். எட்வேட் ராஜசுந்தரம் என்று அவனுக்குப் பெயர் சூட்டப்பட்டது. ஆசைத் தம்பிகள் இருவருக்கு அண்ணன் ஆனுர் செல்வா.

அப்போது செல்வாவுக்கு நான்கு வயது இருக்கும் இனிமையான அந்தப் பிஞ்சு வயது நிகழ்ச்சிகள் இன்றும் தந்தை செல்வாவின் நெஞ்சில் நிழலாடுவதுண்டு.

செல்வாவின் நினைவாற்றலே தனி. வாழ்வின் எந்த நிகழ்ச்சியையும் தந்தை அவர்கள் மறந்துவிடுவதில்லை முக்கியமானநிகழ்ச்சி —முக்கியமற்ற நிகழ்ச்சி என்று அவர் பார்ப்பதில்லை. 'ஒவ்வொரு நிகழ்ச்சியும் வாழ்க்கையில் முக்கியமானதே. வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் முக்கியமானவனே," என்று தந்தை செல்வா அடிக்கடி கூறுவார். 'இறைவன் ஒவ்வொரு மணித்துளியும் அற்புதம் செய்து கொண்டே இருக்கிருன். ஆகவே உலகில் ஒவ்வொரு வாழ்விலும் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் முக்கியமானதே!' என்பதுதான் தந்தை அவர்களின் தத்துவமாகும்.

தந்தை செல்வா தனது இளம்பிறைப் பருவமான நான்கு வயது தைப்பிங் வாழ்க்கை பற்றிய நினைவு [illegible]

—அந்த நாள் நிகழ்ச்சிகளைக் கூறுகிருர்—

"தைப்பிங் பட்டணத்தில் கிங் எட்வேட்ஸ் பாடசாலைக்கு முன்னுல் தெருவோரமாக இருந்த வீடுகளில் ஒன்றில்தான் நாங்கள் குடியிருந்தோம். அது ஒரு பழைய கால மாடிவீடு. மாடிப்படிகளில் அடிக்கடி கால் இடறி உருண்டு விழுவது எனக்கு இன்னும் ஞாபகமாக இருக்கிறது.

எங்கள் வீட்டுக்கு எதிரே இருந்த தெருவில் நீராவி இயந்திர உருளை ஒன்று வேலை செய்துகொண்டிருக்கும் அந்த உருளை பழைய கால உருளை என்பதால் 'கடமுட' என்று சத்தம் போடும். அது வேலை செய்வதை நான் மாடியில்இருந்து கொண்டே இரசிப்பேன். அந்த இயந்திரத்தை ஓட்டும் சாரதியை எனக்கு நன்ருய்ப் பிடித்திருந்தது. மாடியில் இருந்து இறங்கி வரச் சொல்லி அவன் கையைக் காட்டுவான். நான் படிகளிலிருந்து விழுந்தும் உருண்டும். கீழே இறங்கி எப்படியோ அவனிடம் போய்ச் சேர்ந்துவிடுவேன். என்னைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு அவன் இயந்திரத்தை ஓட்டுவான்.

## பழமாமாவின் பாட்டு

'என்னுடைய தாயாரின் ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் அப்போது மலாயாவில் இருந்தார். நமசிவாயம் என்பது அவர் பெயர். அடிக்கடி எங்கள். வீட்டுக்கு அவர் வருவார். அவர் வரும்போதெல்லாம்எனக்குப்பழங்கள் வாங்கிக்கொண்டு வரத் தவறுவதில்லை. அவரை நான் 'பழமாமா' என்று அழைப்பேன். பழமாமா எனக்குச் சொல்லித் தந்த ஒரு பாட்டுக்கூட நினைவில் இருக்கிறது. அது ஒரு கிறித்துவப் பாடல்—

"துள்ளித் துள்ளிப்பாலரே
பாடிப் பாடி ஓடியே
இயேசு அண்டை
சேரலாம்"

'எங்களுடைய வீட்டில் ஒரு சமையல்காரன் இருந்தான். நானும் அவனும் விளையாடுவோம். அடுப்பங்கரையில் உள்ள கத்தியை எடுத்துக் காட்டி என்னை அவன் மிரட்டுவான். நான் பயப்படுகிறதில்லை."

தந்தை செல்வா தனது தைப்பிங் வாழ்க்கை நினைவுகளில் சிந்தை மயங்கிட முகம் மலர்கிருர். ஆம்—அந்தப் பிஞ்சு வயதிலேயே செல்வா அவர்களிடம் பெரும் பண்புகளெல்லாம் மிஞ்சி அரும்பத்தொடங்கி விட்டன!

மாடி வீட்டில் வாழ்ந்த அந்தக் காலத்திலேயே செல்வா மண்பாதைசெப்பனிட்ட உருளை ஓட்டும் தொழிலாளியின் மடிமீதும் வாழ்ந்தார். வீட்டுவேலைக்காரனை விளையாட்டுத் தோழனுய்க் கூட்டி விளையாடினுர் செல்வா.

மலாயாவுக்குப்போகிறவர்கள் தமிழை மறந்துவிடுவதுண்டு. ஆங்கிலத்தில் மூழ்கி அதையே நாகரிகம் என்று கருதுவதுண்டு. அன்னையை 'மம்மி' என்றும் தந்தையைப் 'பப்பா' என்றும் அழைப்பதுண்டு. 'Jack and Jill went up the Hill'. என்ற ஆங்கிலப் பாடலைப் பிள்ளை பிஞ்சு வயதில் பாடினுல் தான் பெருமை என்று கருதுவதுண்டு. ஆனுல் செல்வா அவர்களோ பெற்ருேரை அம்மா அப்பா என்றுதான் அழைத்தார். துள்ளித் துள்ளிப் பாலரே' என்று தூய தமிழிலேதான் பண்ணிசைத்தார்.


செல்வாவின் வீரமும் பிள்ளைப் பருவத்திலேயே அந்த நல்லறத் திருமேனியில்—இரத்தத்தில் – நரம்பில் — உயிர்ப்பில் எங்கணும் திகழலாயிற்று. 'அவன் கத்தியை எடுத்துக் காட்டுவான்—நான் பயப்படுகிறதில்லை' என்று சமையல் காரனுேடு விளையாடிய கால நிகழ்ச்சியைத் தந்தை செல்வா செப்புகிருரே — நாலு வயதுச் செல்வா எவ்வளவு பெரிய வீரன்!

1902ம் ஆண்டு மாரிகாலத்தில் ஹேரியட் அன்னம்மாவும் மூன்று குழந்தைகளும் மலாயாவை விட்டுப் புறப்பட்டார்கள். ஜேம்ஸ் விசுவநாதன் வேலுப்பிள்ளை தொழில் காரணமாக தைப்பிங்கிலேயே தங்கிவிட்டார்.

அன்னைக்குலம் வீட்டை விட்டு வெளியேற அஞ்சிய காலம் அது. பெண்ணை வீட்டின் உள்ளே பூட்டி அடிமைகளாய்ச் சிறைவைத்தபேயர்களின் காலம் அது. அப்போது மகாகவி பாரதிக்கு இருபது வயது இருக்கும். மாதர் குலத்தின் இழிநிலை கண்டு பாரதி மனம் நொந்து போய் இருந்தான்.

—11ம் பக்கம் பார்க்க

காசிஆனந்தன்



சிறைமீண்ட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனை மூதறிஞர் தந்தை செல்வா வாழ்த்தி வரவேற்ற காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமயம் சாய்ந்தது தமிழ் இதயம் ஓய்ந்தது!

**அன்பு நண்பா,**

கண்களிலிருந்து அருவியெனக் கொட்டுகிறது—கண்ணீரல்ல, இரத்தம்; இதயமோ துண்டு துண்டாக வெடித்துச் சிதறி 'ஐயகோ' என அரற்றுகிறது; உணர்ச்சியிருந்தும் உணர்ச்சியற்ற நிலையில் அறிவு இருந்தும் பித்துப் பிடித்தவனின் நிலையில்—இன்றைக்கு நானும் நம் தலைவர்கள் அனைவரும், இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும்—ஏன் தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவனுமே வெம்பிவெடித்து கதறித் துடிக்கின்றான்!

ஓங்கி உயர்ந்து தமிழினத்தைத் தாங்கி நின்ற இமயம் திடீரென சாய்ந்து விட்டது; 35 இலட்சம் தமிழ்பேசும் மக்களுக்காக ஒவ்வொரு வினாடியும் துடித்துக் கொண்டிருந்த அத்தூய தமிழ் இதயம் திடீரென ஓய்ந்துவிட்டது; தன் அகன்ற கிளைகளைப் பரப்பி தமிழ் சமுதாயத்தை அணைத்து நிழல் தந்துவந்த அந்தப் பெரிய ஆலவிருட்சம் அடியோடு பாறி வீழ்ந்துவிட்டது! தமிழ் சமுதாயத்தை தன்மெல்லிய குரலால் ஆணையிட்டு வழி நடத்தி வந்த அன்புத்தெய்வம் சொல்லாமல் கொள்ளாமல் மறைந்து விட்டது! தன் பெரிய இதயத்தினால், தமிழ் சமுதாயத்தை ஒரு குடைக்கீழ் கொண்டுவந்து தமிழனின் பெருமையை உலகுக்கு பறைசாற்றிக் கொண்டிருந்த உன்னத ஆத்மா ஓய்வெடுத்துக் கொண்டு விட்டது!

காலம்நமக்கென ஆக்கித்தந்தஈடிணையற்ற ஒரேயொரு அரசியல் மாமேதையை காலமே இன்று விழுங்கிவிட்டு,எம்மைக் கையறுநிலையில் கலங்கிடவைத்திருக்கிறது; தன்னுடைய தூய்மையினாலும், வாய்மையினாலும், ஓர்மையினாலும், நேர்மையினாலும், அடக்கத்தினாலும், அறிவினாலும் யாருக்கும் ஈடின்றி இணையின்றி தமிழ் சமுதாயத்தை வழிநடத்திவந்த மகான் செல்வா தன் பொன்னுடலையும் தமிழ் ஈழ மண்ணுக்கு தருகின்ற முடிவை இவ்வளவு விரைவாக எடுப்பாரென்று நாம் துளியும் எதிர்பார்த்திட வில்லையே!

அவர் உடல் நிலைமை மெல்லமெல்லத் தேறிவருவதாக கடந்த 34 நாட்களாக நாள்தோறும் வந்த செய்திகளைக் கேட்டு என்ன மாதிரிமகிழ்ந்திருந்தோம்?மூதறிஞர்நலம்பெற்றெழுந்திடுவார்; தன் முழு நிலவுச்சிரிப்பை உதிர்த்து நம்மத்தியிலே வலம் வருவார் என்றெல்லாம் எத்துணைநம்பிக்கையோடு காத்திருந்தோம்? ஊரில் உள்ள கோவில்களிலெல்லாம் தமிழ் மக்கள் நாள்தோறும் அர்ச்சனைகளும், பிரார்த்தனைகளும், வழிபாடும் நடத்தி இறைவனுக்கு எத்தனை வேண்டுதல்கள் செய்தார்கள்? அத்தனை வேண்டுகோளில் ஒன்ருவது இறைவன் காதுகளில் வீழாதவாறு, இறைவன் காதுகள் செவிடாகிவிட்டனவோ? இரக்கம் என்பதே இறைவனிடம் அற்றுப்போய் விட்டதோ?

டாக்டர் ராமமூர்த்தி தந்தை செல்வாவுக்காக சிபார்சு செய்திருந்த வெளிநாட்டு மருந்து அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்ததும், சென்ற ஞாயிற்றுக்கிழமை (24-4-77) அந்த மருந்தையும் எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ஓடோடிச் சென்று ஒப்படைத்தபோது எத்துணை மகிழ்ச்சி என்னிதயத்தில் எழுந்தது? இந்த மருந்துடன், மூதறிஞர் நினைவு பெறுவார்; நம் தொல்லைகள் எல்லாம் தீரும் என்றன்ருே மெத்த ஆர்வத்தோடு நம்பியிருந்தேன்? ஆனால், நாமொன்று நினைத்திட அதற்கு எதிர்மாருக எண்ணுபவனுக்குப் பெயர்தான் தெய்வம் போலும்!

மூதறிஞர் தந்தை செல்வாவுக்கு எதிர் நீச்சல் போடுவதிலே எப்போதும் விருப்பம் உண்டு; வலுச்சண்டைக்குப் போகக்கூடாது; வந்த சண்டையை விடக்கூடாது என்பது அவரது கொள்கை; நியாயத்துக்காகவும், தர்மத்துக்காகவும் போராடுவதற்காக இறைவனால் அனுப்பிவைக்கப்பட்ட மாமேதை அவர்; போராட்டமே அவரது அரசியல் வாழ்க்கையாக அமைந்திருந்தது; போராடப் பிறந்த தலைவர் அவர்; தம்முடைய இறுதி நாட்களிலும், யாழ் வைத்தியசாலையில் ஏறத்தாழ 35 நாட்கள் காலனுடன் அவர் தொடர்ந்து நடத்திய போராட்டத்தை நினைக்கும்போது நெஞ்சம் விம்முகிறது!

இந்நாட்டுத் தமிழ்மக்களின் முப்பதாண்டு கால அரசியல் வரலாற்றில் தந்தை செல்வா அவர்கள் ஒரு சகாப்தம்; நேர்மை, சத்தியம், தியாகம், அந்தரங்க சுத்தி, திண்மை, விடாப்பிடியான உறுதி, இவையே அரசியலில் அவர் பின்பற்றிய—மக்களிடையே அவர் வளர்க்க விரும்பிய பெரும் பண்புகள். இந்தப் பெரும் பண்புகளின் அடிப்படையிலேதான் அவர் தனது வரலாற்றை எழுதிவந்தார். கோழைத்தனம் என்பது அவர் குருதியிலே கொஞ்சம் கூடக் காணக்கிடைப்பதில்லை! சரியானவற்றை—துணிவாகச் சொல்லுகின்ற உள்ளத்தின் ஒளி அவரிடத்திலே குடிகொண்டிருந்தது! உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய காரணத்தினாலேதான் அவர் இன்று தமிழ் மக்களின் உள்ளங்களிலேயெல்லாம் உயர்ந்தோங்கி நிற்கிருர்!

இந்நாட்டின் மிக உயர்ந்த பதவியாகிய பிரதம நீதியரசர் பதவியிலே மின் விசிறியின் கீழே உட்கார்ந்து 'சொகுசாக' வாழவேண்டிய மூதறிஞர் தந்தை செல்வா, முப்பதாண்டுகளுக்கு முன்னர் அந்த வாய்ப்பை உதறியெறிந்துவிட்டு, தமிழ் சமுதாயத்துக்கு நீதிகோரி அடிமைத்தனத்தை எதிர்த்து தமிழரசு இயக்கத்தை ஆரம்பித்தார். இந்த இயக்கத்தை வளர்க்க காடுமேடென்று சுற்றினார்; இயக்கத்தை முளையிலேயே கிள்ளியெறிய முனைந்தவர்களின் எதிர்ப்புக்களை முறியடித்தார்; தோல்விகளை கண்டு துவண்டாரில்லை; அவற்றையெல்லாம் வெற்றிக்கான படிகளாகப் பயன்படுத்தினார்! இலட்சாதிபதியாக வாழ்ந்தவர், இனத்துக்காக உழைத்து "பிச்சாண்டி" ஆனார்! ஊருக்காக உழைத்து ஓட்டாண்டியானார்! ஆனால் தமிழ் சமுதாயத்தின் நெஞ்சிலோ நீங்கா இடம் பெற்று நிலையாக வாழ்கிருர்!

சிறைச்சாலைகள் அவரது சிந்தனையைக் குழப்பியதில்லை; சட்டத்தில் பட்டம்பெற்று, கியூ.சி. ஆக விளங்கிய அவர், மட்டக்களப்பிலே சிங்கள அரசின் அநியாயச் சட்டத்தை மீறி சிங்கள சிறீயை அழித்து அதனால் நீதிமன்றத்திலே ஒருவார சிறைத் தண்டனையையும் ஏற்று மட்டக்களப்பு சிறைச்சாலையிலே சாதாரண ஒரு கைதியாகி, ஒரு கைதியின் உடையிலே கைதிகளோடு கைதியாகி இருந்த அந்த நினைவுகளை நம் நெஞ்சிலே எண்ணிப்பார்க்கிருேம்; இதயம் அழுகிறது!

தடைகளை கண்டு அவர் தயங்கியவரல்லர்; சிங்கள ஏகாதிபத்தியம் இருதடவைகள்-1958 இலும் 1961லும் - தமிழரசுக்கட்சியை தடைசெய்ததோது - தமிழினத்தின் விடுதலைக்குரலாகிய சுதந்திரனை தடைசெய்தபோது-கலங்கி நின்றவரல்லர் அவர்;கடமைகளை தொடர்ந்து செய்து அத்தடைகளைப் பொடிப் பொடியாக்கியவர் அவர்; சீறி வந்த சிங்கள ஏகாதிபத்திய வெள்ளத்துள், தமிழினம் மூழ்கி அழிந்து விடாமல் வைரம்பாய்ந்த வரம்பாக அதை எதிர்த்து நின்றவர் அவர்!



சுதந்திரன் ஏட்டை அவர் தன் உயிர் மூச்சாகக் கருதியவர்; அதற்காக பல இலட்சக்கணக்கான ரூபாய்களை கொட்டியவர்; சுதந்திரன் தமிழினத்தின் நலனுக்காக தவருது வெளிவரவேண்டுமென்று விரும்பியவர்; ஆனால் அதற்காக சுதந்திரனின் எழுத்துச் சுதந்திரத்தில் என்றுமே தலையிட்டவரல்லர் அவர்! பொதுநலத்தை சுயநலத்துக்காக பயன்படுத்தும் குறுகிய எண்ணம் கிஞ்சிற்றும் இல்லாதவர்! சாதப்பிரிவினை, மதப்பிரிவினை, பிரதேசப்பிரிவினை பேசிக்கிடந்த ஈழத்தமிழினத்தை ஒரே தேசிய இனமாக்கி, விடுதலை உணர்ச்சியையும், தன்மானத்தையும் ஊட்டியவர் அவர்!

அவரது மூச்சே, தமிழனின் ஒரே மூச்சாக இருந்தது; அவரது சிந்தனையே தமிழனின் ஒரே சிந்தனையாக இருந்தது; தமிழினத்தின் தேசிய உணர்வின் கூட்டு மொத்த வடிவமாக விளங்கினார் அவர்! அவரது 'நா' அசைவுக்குள் தமிழினம் கட்டுப்பட்டுக்கிடந்தது! அவர் விட்டுச்சென்ற கருத்துக்களே நமக்கு என்றைக்கும் வேதமாக விளங்குகின்றன!

கட்சிவேறுபாடுகளைக்களைந்து—அரசியல் வேறுபாடுகளை அகற்றி—தமிழ்

## அரசியல் மடல்

ஈழத்திலுள்ள அனைத்துக்கட்சிகளையும் இணைத்து இன ஒற்றுமையை ஏற்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியெனும் தேசிய விடுதலை இயக்கத்தை உருவாக்கி— அதற்கென தனியான தேசியக் கொடியாக உதயசூரியன் கொடியை அமைத்து சுதந்திரத் தமிழ் ஈழ அரசை மீள அமைக்கும் பொதுவான இலட்சியத்தை தமிழினத்தின் தேசிய இலட்சியமாகப் பிரகடனப் படுத்தி—தமிழ் சமுதாயத்தின் தனிப்பெரும் தலைமையை ஏற்று விடுதலைப் பாதையிலே ஒன்றுபட்ட தமிழினத்தை வழிநடத்தி வந்த மூதறிஞர் செல்வா அவர்கள் வெண்ணை திரண்டுவரும் வேளையில் தாழியுடைந்த கதையாக திடீரென நம்மைவிட்டுப் பிரிந்தததனால் ஏற்பட்டுள்ள பேரிழப்பு காலாகாலத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்!

1970ம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவடைந்ததும், மூதறிஞர் செல்வா வெளியிட்டிருந்த செய்தியில் 'தமிழினத்தை கடவுள்தான் காப்பாற்றவேண்டும்' என்று கூறியிருந்தார்! இன்றைக்கு, தந்தை செல்வாவின் அதே வார்த்தையை நினைவிற்கொண்டு, பரம்பொருளிடம் பின்வருமாறு வேண்டுவோம்!

**இறைவனே! தந்தை செல்வாவை எமக்குத்தந்த பரம்பொருளே! தந்தையை எம்மிடமிருந்து பறித்து எடுத்துக்கொண்ட நீ, இந்த நெருக்கடி வேளையிலே தமிழ் சமுதாயத்துக்கு சரியான வழியைக் காட்டு; தமிழினத்தைக் காப்பாற்று — தந்தையின் அடிச்சுவட்டில் — தொடர்ந்து இயக்கத்தை வழிநடத்திச் செல்லவிருக்கும் அண்ணன் அமிர்தலிங்கத்துக்கு பூரண ஆசி வழங்கு!'**

**உன் அன்பு தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# செல்வா சகாப்தம்!

மூப்பது ஆண்டுகளாக ஈழத்தமிழ் சமுதாயத்தின் இருள் போக்கி ஒளி வீசிக்கொண்டிருந்த தண்மதி மறைந்துவிட்டது!

சுதந்திர சூரியன் உதிக்கின்ற நேரம் தூங்காதே தமிழா என்று தூங்கிக்கிடந்த தமிழனைத் தட்டியெழுப்பி—பாதையையும் பயணத்தையும் வகுத்து அந்த வழியிலே தமிழ் சமுதாயத்தை வழி நடத்தி வந்த மாமேதையை—வாராது வந்து கிடைத்த தமிழ்க் குலத்தின் மாணிக்கத்தை இன்று இழந்துவிட்டோம!

பரிசுத்தமான இதயத்துடன் — நேர்மை ஒன்றையே தன்னுடைய இராசதந்திரமாகக்கொண்டு — மாற்ருரும் போற்றுகின்ற மகோன்னத நிலையை அடைந்து — தமிழ் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக ஈழத்து அரசியல் வானில் ஜொலித்துக்கொண்டிருந்த உதயதாரகை திடீரென வீழ்ந்துவிட்டது!

தமிழ் மக்களை விடுதலைப்பாதையிலே வழி நடத்தும் பொறுப்பை ஏற்றவர்கள் — கொண்டகொள்கையை மறந்து கோணல் வழியை நாடிய நேரத்தில் — கலங்கி நின்ற தமிழ் சமுதாயத்துக்குக் கைகொடுத்து. இலட்சியத்தை அழியவிடாது தோள் கொடுத்துக் கட்டி வளர்த்து, தமிழ்தேசிய இனத்தின் விடுதலை இயக்கத்தை இன்றைய மகோன்னத நிலையடையச் செய்த தமிழினத்தின் ஆதாரமூலவித்தை இழந்துவிட்டோம்!

பலனை எதிர்பாராது கடமையாற்றுவயையே தனது சுய தர்மமாகக்கொண்டு — பதவி ஆசைகள் கிஞ்சிற்றுமின்றி— பாழ்பட்டு நின்ற தமிழ்ச் சாதியின் தாழ் நிலை போக்கிட தனதுசிந்தனை,சொல்,செயல்,செல்வம்,நேரம், காலம்,அனைத்தையுமே திரிகரண சுத்தியுடன் அர்ப்பணித்து — நினைவு இழந்து படுக்கையில் வீழும்வரை சதா ஓயாது உழைத்துக்கொண்டேயிருந்த மகாத்மா— கர்ம வீரர்—இன்று நம்மிடையே இல்லை!

ஆம்—400 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் சமுதாயத்தின் சுதந்திரத்தை மீட்பதற்காக வாராது வந்துதித்த மாமேதை மூதறிஞர் செல்வா அவர்களின் மறைவிஞல் திகைத்து தேம்பித் தடுமாறி அழுதுபுரண்டு ஆற்றுவாரும் தேற்றுவாருமின்றி அரற்றுகிறது தமிழினம்!

அடக்கம், அமைதி, ஆண்மை, எளிமை, உறுதி, வைராக்கியம், வீரம், கிஞ்சிற்றும் சுயநலமற்ற பரித்தியாகம், விடுதலை வேகம், தன்மானம் — இவற்றின் கூட்டு வடிவமே மூதறிஞர் தந்தை செல்வா. இதே பண்புகளின் அடிப்படையிலேதான் புதியதொரு தமிழ் சமுதாயத்தை உருவாக்கிட அவர் இறுதிவரை உழைத்தார்!

ஈழத்தமிழினத்தின் கடந்த முப்பதாண்டு காலச் சரித்திரம்—தந்தை செல்வாவினுடைய சரித்திரம்; ஏனெனில் அவர் பிறந்திருக்காவிடின், இன்று ஈழத்தில் தமிழ் இல்லை; தமிழன் இல்லை; தமிழினம் இல்லை! அவர் காலத்தின் தேவையறிந்து கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசி என்பதை அவரது எதிரிகளும் இப்போது ஒப்புக்கொள்ளுகிருர்கள்!

ஈழத்தமிழினத்துக்கு துணிவையும், வீரத்தையும், திராணியையும், தெம்பையும், நம்பிக்கையையும் ஊட்டி—சாதி, மத, பிரதேச வேறுபாடுகளை களைந்தெறிந்து—அரண்மனையிலிருந்த அரசியலை ஆலமரத்தடிக்குக்கொண்டுவந்து—சாதாரண மக்களையும் அரசியல் பற்றி சிந்திக்கவைத்து— தமிழ் சமுதாயத்தின் பலம் முழுவதையும் ஒன்று திரட்டி—தமது அரசியல் அனுபவத்தின் துணைகொண்டு தமிழ் பேசும் மக்களுக்கென மாற்றமுடியாத இறுதி இலட்சியமான "சுதந்திரத் தமிழ் ஈழத்தை" உருவாக்கித் தந்துவிட்டு—முப்பதாண்டு கால இடைவிடா உழைப்பின் களைப்பிஞல் இன்று கண்மூடி உறங்குகிருர் மூதறிஞர்!

தமிழ் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராக இருந்து—பின்னர் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவராகி—தமிழ் சமுதாயத்தின் பூரண நம்பிக்கையைபெற்று—இறுதியாக தமிழ் காங்கிரசும் தமிழரசுக்கட்சியும், மலையகத்தின் இலங்கை தொழிலாளர் காங்கிரசும் இணைந்த தமிழினத்தின் ஏகோபித்த தேசிய விடுதலை இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணியின் மகோன்னத தலைவராக உயர்ந்து—35 இலட்சம் தமிழ்பேசும் மக்களினதும் ஏகத்தலைவராக பரிணமித்து இதய சிம்மாசனத்திலே வீற்றிருந்து அவர்களை வழிநடத்திவந்த மகான் செல்வா மறைந்துவிட்டார்!

ஆனுலும் — அவர் காட்டிச்சென்ற பரிசுத்தமான தியாகப்பாதை எதிரே தெரிகிறது; அவரது நேர்மையான சத்தியவழி தெரிகிறது; அவர் எடுத்துச்சொல்லி விட்டுச்சென்றிருக்கின்ற கருத்துக்கள் ஒளிவிட்டுக் கொண்டிருக்கின்றன; அவர் அரசியலில் பின்பற்றிய வழிமுறைகளும், பண்புகளும், அணுகு முறைகளும் எதிரே தெரிகின்றன! அந்தவழியில், அவர் காட்டிய பாதையிற் சென்று வேற்றுமைகளை மறந்து அவரது இலட்சியத்தை நிறைவேற்ற உழைத்திடுவது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்!

சுதந்திரத் தமிழ் ஈழமே அவர் நமக்கு விட்டுச் சென்ற உயில்! அந்த இலட்சியம் நிறைவேறிஞல் மட்டுமே மூதறிஞரின் ஆன்மா சாந்தியடையும்!

"தந்தை செல்வா, தமிழ் ஈழம்" என்கிற இந்த இரண்டு மூல மந்திரங்களும் எமக்கு வழிகாட்டட்டும்! பரிசுத்தமான இதயத்துடன், தந்தை செல்வா காட்டிச் சென்றுள்ள வழியில் பயணத்தை தொடர அவரது பொன்னுடல்மீது ஆணையிட்டு உறுதியேற்போம்!

செல்வாவின் சகாப்தம் முடியவில்லை; அது தொடருகிறது என்பதை நமது செயல் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டுவோம்!

# அரசியல் நாணயஸ்தர்

உலர்ந்த உடல், ஒடுங்கிய குரல், நலிந்த நடை இவற்றைக்கொண்ட எம் செல்வாக்கிழவன் நிரந்தரமான உறக்கத்திலாழ்ந்து விட்டார். இந்தச் சிறிய உருவத்தின் உறக்கத்தின் எதிரொலி தமிழ் கூறும் உலகெங்கணும் பேரிரைச்சலாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. சருகு உடல் சாய்ந்தது இமயம் இடிந்து வீழ்ந்த சத்தத்தை உண்டாக்கியுள்ளது. தாஜ் மகால் தடாலென்று சரிந்ததுபோன்ற பிரளயப் பின்னணியிலே மூழ்கிக்கிடக்கிறது நாடு. குய்யோ முறையோ என்று கூன்குரலிடுகிறது தமிழர் கூட்டம். திக்கெட்டும் வாழும் திராவிட சமுதாயம் தேம்பியழுகிறது. ஏனுக்கும்?

## தீர்க்கதரிசி:

சரிந்து சிதைந்து சாம்பல் மோடாகிவிட்ட தமிழர் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தை இந்நாட்டில் மீட்டுத் தந்தவர் இந்தக் கிழவரல்லவோ. பேடிமையும் துரோகமும் பேயாட்டமாடிய இந்தத் தமிழ் மண்ணிலே தீரத்தையும் தியாகத்தையும் வடித்துத் தந்தவர் இந்தக் கிழவரல்லவோ. தனது பாரம்பரியத்தில் எல்லைக்கோடுகளை இழந்துவிட்டு—பூகோளப் பரப்புக்களையும் வரலாற்று, வரப்புகளையும் நிர்ணயிக்க தெரியாது — திக்கற்றுக் கிடந்த திராவிட மகனுக்கு ஒளி காட்டியும் வழிகாட்டியும் இந்தக் கிழவரல்லவோ. பட்டமும் பதவியும் பவிசும் கொட்டமடித்த அரசியல் அரங்கிலே கொள்கையும் நேர்மையும் கோலோச்ச வந்தது இந்தக் கிழவரல்லவோ. இந்நாட்டுத் தமிழ் மகனுக்கு வரவிருந்த விக்கினங்களையெல்லாம் அக்கு வேறு ஆணிவேருக வருமுன்னரே வகுத்துக்காட்டிய தீர்க்கதரிசி எங்கள் கிழவரல்லவோ?

## பிழைத்தது:

"வாழு வாழவிடு" என்றொரு கோட்பாடு உண்டு. இதில் பாதியைத்தானே பெரியவர் கடைப்பிடித்தார். முதல் பாதியை விட்டுவிட்டு இரண்டாவது பாதியைக் கைக்கொண்டார். வாழாவெட்டியான தமிழினத்தை வாழவிட்டார்— அதற்குமேலாக வாழ வழியும் வகுத்தார். தான் மட்டும் வாழத் தவறிவிட்டார். தன்னை ஒறுத்தார்; இனத்தை வளர்த்தார். இதனுல்தான் எங்கள் ஐயாவின் தீர்க்கதரிசனம் அனைத்தும் தமிழ் மக்களின் விக்கினங்களை முன்கூட்டியே உரைத்த வரையில் முழுமையானது. தமது சொந்த வாழ்வை வரையறுப்பதில் பிழைத்துவிட்டது. இன்னும் ஆருண்டுகள் வாழ்வேன் என்று சென்ற அக்டோபர் மாதம் எனது விருந்தில் கூறிய எம் ஆருயிரத் தந்தை பிழைத்துவிட்டாரே. ஒருவேளை ஆறு மாதங்களைத் தான் ஆறு ஆண்டுகள் என்று நாத்தடுமாறிக் கூறிஞரோ என்னவோ.

அரசியல் விமர்சகர்களுக்கும் சரித்திர ஆசிரியர்களுக்கும் ஒன்று உரைப்பேன். எங்கள் பெரியவரின் சாதனைகளை நீங்கள் சல்லடையிலிட்டு அரித்துக் கொண்டிருக்கலாம், ஆராயலாம், வேண்டியவாறு விமர்சிக்கலாம். அது உங்கள் உரிமை ஆனுல் ஒரேயொரு சங்கதியையாவது மனச்சாட்சியோடு ஒப்புக்கொள்ளுங்கள். வஞ்சகமும் அயோக்கியத்தனமும் வக்கரித்துக் கொண்ட ஈழத்து அரசியல் அரங்கிலே இந்தக் கிழவன் ஒரு யோக்கியன் — மகா யோக்கியன்—பரம யோக்கியன். பொய்மையும் போலித்தனமும் செறிந்த அரசியற் புலத்திலே எங்கள் தலைவர் ஒரு நாணயஸ்தன். இந்த வாசகத்தை விமர்சிக்கத் தலைப்படாதீர்கள். ஏனென்ருல் இது ஓர் அடிப்படை உண்மை.

— கரிகாலன்

## தலைமகனின் பொன்..

—1-ம் பக்கம் தொடர்

சனிக்கிழமை காலை தெல்லிப்பளையிலுள்ள அமரர் செல்வாவின் இல்லத்திலிருந்து காங்கேசன் துறை வீதி வழியாக யாழ் நகரை நோக்கி அமரரின் புனிதவுடல் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு யாழ் முற்றவெளியில் ஸ்டேடியத்துக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள மேடையில் வைக்கப்படும் அங்கு தலைவர்கள் தமது இறுதி அஞ்சலி உரைகளை நிகழ்த்துவார்கள். பிற்பகல் 5.30 மணிக்கு யாழ் மாநகர சபைக்கு அருகிலுள்ள பொது இடத்தில் மூதறிஞரின் பூதவுடல் தமிழர் கலாசாரப்படி தகனம் செய்யப்படும். இந்த இடத்தில் காலமெல்லாம் தமிழினத்துக்காக ஓயாது உழைத்த மூதறிஞர் செல்வாவின் நினைவாக மணிமண்டபம் ஒன்று கட்டியெழுப்பப்பட்டு, அந்தமணி மண்டபத்தில் மத்தியில் மூதறிஞரின் உருவச்சிலை பிரதிஷ்டை செய்யப்படும்!

மூதறிஞரின் சாம்பல் தமிழ் ஈழத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு, ஆங்காங்கு புதைக்கப்படும். அதன் மீது நினைவுச்சின்னங்களும் நினைவுச்சிலைகளும் எழுப்பப்படும்.

தமிழினத்தின் நம்பிக்கையொளியாக விளங்கிய மூதறிஞர் செல்வா அவர்களின் பொன்முகத்தைஒருதடவை இறுதியாகப் பார்த்து தமது இறுதி அஞ்சலியை தெரிவிப்பதற்காக நாட்டின் நாலு திசைகளிலிருந்தும் பல இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்களும் தமிழர் கூட்டணி பிரமுகர்களும் தலைவர்களும் பா.உ.க்களும் யாழ்ப்பாணத்தில் திரண்டுள்ளனர். சென்ற புதன்கிழமை இரவு முதல் வெள்ளிக்கிழமை இரவு வரை யாழ் வீர சிங்கம் மண்டபத்தில் மூதறிஞரின் பூதவுடல்இறுதி அஞ்சலிக்காக வைக்கப் பட்டிருந்த போது, அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் உட்பட இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் சாரி சாரியாக திரண்டு வந்து கலங்கிய கண்களுடன் அமரருக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்திய காட்சி காண்போர் உள்ளத்தைப் பிழிட்டழ வைத்தது.

### பிரதமர் அஞ்சலி

சிறீலங்கா பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டார நாயகாவும், அவரது அமைச்சர்களும், 28. 4. 77 வியாழக்கிழமை தமிழீழத்தலைநகராகிய யாழ்ப்பாணத்துக்கு விசேட விமானத்தில் வந்து தமிழ் ஈழத்தின் தேசபிதா மூதறிஞர் செல்வாவுக்கு தமது இறுதி அஞ்சலியையும் மரியாதையையும் தெரிவித்ததுடன் திருமதி செல்வாவுக்கு ஆறுதலும் கூறிஞர். தே. பே. சபாநாயகர் திரு. [illegible]

## 4 கோடி தமிழ் ...

— 1ம் பக்கத்தொடர்

மக்களும் தாளாதவேதனையுடன் பங்குகொள்ளுகிருர்கள். தலைவனைப் பிரிந்து வாடும் ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களுக்கும் செல்வநாயகம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத்தெரிவியுங்கள்!"

—இவ்வாறு தி. மு. கழகத் தலைவர் கலைஞர் கருணுநிதி, மக்கள் திமுக தலைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், அ. இ. அதிமுக தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன், ஆகியோர்சென்னையிலிருந்து தொலைபேசி மூலம் சுதந்திரன் ஆசிரியரிடம் தெரிவித்தனர்.

மூதறிஞர் செல்வாவின் மறைவு செய்தியை 26-4-77 செவ்வாய் நள்ளிரவுதொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேற்கண்ட தலைவர்களுக்கு சுதந்திரன் ஆசிரியர் அறிவித்த போதே அவர்கள் மேற்கண்டவாறு துயரம்தோய்ந்த குரலில் தெரிவித்தார்கள்.

பெரியவரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள தாம் முயற்சிப்பதாக எம். ஜீ. ஆர். அவர்கள் சுதந்திரன் ஆசிரியரிடம் தெரிவித்தார்.

உலகத் தமிழ் இளைஞர் பேர்வைத் தலைவர் டாக்டர் இரா. சனார்த்தனமும் இங்கு வரக்கூடும் என்று தெரிகிறது.

இலங்கை அரசு விஸா ஏதுமின்றி தமிழகத்திலிருந்து ஐந்து தலைவர்களை இங்கு வந்து செல்வாவின் இறுதியாத்திரையில் கலந்துகொள்ள அனுமதித்துள்ளது. என்ற தகவல் நேற்று இரவு (27-4-77) மேற்கண்ட தலைவர்களுக்கு அனுப்பப் பட் சிலம்புச்செல்வர் மா. பொ. சி. அவர்களுக்கும் நாவலர் நெடுஞ்செழியன் மூலமாக இச்செய்தி அறிவிக்கப்பட்டது.

இலங்கை அரசு, தமிழகத்திலிருந்து இங்கு வரும் தலைவர்கள் எவரும் இரங்கற் கூட்டத்தில் உரையாற்றக் கூடாது; மரணவீட்டில் கலந்துகொண்டு விட்டு, உடனடியாக இந்தியா திரும்பிவிடவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே விஸா வழங்க முன்வந்துள்ளது.

செல்வாவுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அண்மையில் இங்கு கலைஞர் கருணுநிதியினுல் அனுப்பி வைக்கப்பட்ட உலகப்புகழ் பெற்ற நரம்பு மூளைசிகிச்சை நிபுணர் டாக்டர் ராமமூர்த்தியும் தந்தைசெல்வாவின் மரணத்துக்கு தமது அனுதாபத்தைதெரிவித்தார்.

## சுதந்திரன் அலுவலகத்தில் கறுப்புக்கொடி!

தந்தை செல்வாவின் மறைவையொட்டி சுதந்திரன் அலுவலகத்தில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. தலைவருக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக சுதந்திரன் ஊழியர்கள் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர். அவர்களுக்கு ஒரு நாள் லீவு வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அடுத்த புதன் (4-5-77) கிழமை சுதந்திரன் இதழ் மட்டும் வெளிவரமாட்டாதென்பதை அறியத் தருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAST WILL OF CHELVA

We started the federal movement at one time to obtain the lost rights of the Tamil-speaking people and now we have found that through federalism we cannot achieve our objective. In view of this experience we have come to the conclusion that we must separate and if we do not do that the Tamil-speaking people will never be able to get back their lost rights.

Our ancient people were wise. They had their own kingdom. In the history of Ceylon we had a place. We are not asking for a division of the country by our movement but we are only trying to regain what we have lost.

Our party is today moving with the idea of establishing a separate state. It is not an easy matter to get a separate state. It is a difficult matter. We know that it is difficult. But either we get out of the power of the Sinhalese masses or we perish. That is certain. Therefore, we will try and get this separation.

We have abandoned the demand for a federal constitution. Our movement will be all non-violent.

HANSARD 19-11-76



## தந்தை செல்வா விட்டுச்சென்ற உயில்!

தமிழ் பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாம் ஒரு காலத்தில் சமஷ்டி இயக்கத்தை ஆரம்பித்தோம். ஆனால் சமஷ்டி மூலம் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது. கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது அறிந்துகொண்டு விட்டோம்.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்துவாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதை நாம் செய்யாவிட்டால், தமிழினம் தனது இழந்த உரிமைகளை ஒருபோதும், மீட்டுக் கொள்ள முடியாது.

எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர். அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சியை வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில் எங்களுக்கென ஓர் இடம் இருக்கிறது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை. இழந்த எங்கள் உரிமையான தமிழ் இராச்சியத்தை மீள அமைக்க வேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித் தமிழ்ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகிறது. தனித் தமிழ்ஈழம் நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும், மிகவும் கஷ்டமானதென்பதும் எங்களுக்குத் தெரியும். ஆனால் நாம் ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்துக்குள்ளிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும் அல்லது அழிந்துபோக வேண்டும். இது உறுதியானது. எனவே நாங்கள் போராடி தனித் தமிழ்ஈழத்தை நிறுவியே தீருவோம்!

நாங்கள் சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டுவிட்டோம். எங்கள் தனி நாட்டுக்கான இயக்கம் அஹிம்சை அடிப்படையிலேயே நடைபெறும்.

சா. ஜே. வே. செல்வநாயகம்

—19-11-1976 (தேசிய அரசுப்பேரவை பதிவேடு தொகுதி 20; இல (10) பற்றி 1963)

## கடமை வீரர் செல்வா!

எனக்கு இப்பொழுது 78வயது ஆகிவிட்டது. நான் இன்னும் கனகாலம் இருப்பது ஐமிச்சம். ஆனால் சாகுமுன்பு தமிழினத்துக்கு நான் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு சாகத்தான் எனது விருப்பம்;

—1976 திருகோணமலை மாநாட்டில் தந்தை செல்வா



# "எனது அரசியல் வாரிசு அமிர்தலிங்கமே! அவர் காலத்தில் தமிழ் ஈழம் மலரும்!!

## துணிவும் தியாகமும் நிரம்பியவர் அவர்"

"எனக்குப்பின் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இப்போது அதைக்கொண்டு நடத்தும் திரு. அமிர்தலிங்கத்திடம் நான் காணும் முக்கிய சிறப்பியல்பு அவருடைய அஞ்சாமையாகும்.

மிகப் பலம் வாய்ந்த எமது எதிரியாகிய இலங்கை சிங்கள அரசாங்கத்தை எதிர்த்து நாம் போராடுவதற்கு அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களே வேண்டும்.

அமிர்தலிங்கத்திடம் பல சிறந்த இயல்புகள் இருக்கின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் அவர் திறமையாகப் பேசும் ஆற்றல்படைத்தவர். தலைவன் ஒருவனுக்குவேண்டிய குணங்கள் அனைத்தும் அவரிடம் உண்டு. ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்குப் போராடுவதற்கு அவருக்குப்போதிய காலம் இருக்கின்றது. வயதைப்பொறுத்த வரையில் அவரை ஒரு இளைஞர் என்றுதான் சொல்ல வேண்டும்!


எனது காலத்திலேயே தமிழ் மக்களின் விடுதலை கிடைத்துவிடும் என்று சொல்லக்கேட்டிருக்கிறேன். அப்படி அது கிடைக்காமற்போனாலும் அமிர்தலிங்கததின் வாழ்நாளில் அது கிடைத்துவிடும் என்று நான் நம்புகிறேன்!

—மூதறிஞர் தந்தை செல்வா

தமிழரசுக் கட்சி வெள்ளி விழாவின்போது வெளியிட்ட செய்தியில்— (சுதந்திரன் 22-12-74)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டமறுப்புப் போர்க்களத்தில் தந்தை செல்வா



1975ம் ஆண்டு "மே 22" குடியரசு எதிர்ப்பு சட்ட மறுப்பின்போது கொதிக்கும் வெய்யிலின் மத்தியில் துப்பாக்கி ஏந்திய பல நூற்றுக்கணக்கான பொலிசார் சூழ்ந்து நிற்க மூதறிஞர் தந்தை செல்வா சட்டமறுப்பில் ஈடுபட்டிருக்கிறார். இந்த ஆண்டு 'மே 22'ல் மூதறிஞர் நம்மிடையே இல்லையே!




மக்கள் திலகம் எம். ஜி. ஆருடன்

# கொள்கைக் கோமான்

"சுதந்திர உணர்ச்சிக் கனலை அணைத்துவிடாமல் இன்றளவும் பாதுகாக்கின்ற பாது காவலராக வீரராக, அறிஞராக, ஆற்றலாளராக தந்தை செல்வா இலங்கைத் தமிழர்கள் மத்தியில் உலாவிக் கொண்டிருக்கிறார். இலங்கைத்தமிழர்களிடம் அவ்வளவு பெரிய செல்வாக்கு அவருக்கு இருக்கக் காரணம், அவர்கொண்டிருக்கிற கொள்கைதான்.

கடந்த பல தேர்தல்களில் செல்வா அவர்கள் பெற்ற வாக்கு வித்தியாசத்தினைவிட அண்மையில் நடைபெற்றதேர்தலில் மிக அதிகவாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றிருப்பது ஒன்றே அவர்கொண்டிருக்கிறகொள்கைக்கு இலங்கையில் இருக்கிற உண்மையான தமிழர்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதற்கு அடையாளமாகும்.

—கலைஞர் மு. கருணாநிதி
(1975 ஆண்டு சென்னையில் நடைபெற்ற
செல்வா பிறந்த நாள் விழாவில் பேசியது)




கலைஞர் கருணாநிதியுடன் மூதறிஞர் நடுவில் காணப்படுபவர் டாக்டர் இரா. சனார்த்தன




தனது அரசியல் வாரிசு அமிர்தலிங்கத்துடன் 1975மே 22ம் நாளன்று சட்டமறுப்பு போராட்டத்திலீடுபட்டிருக்கிறார் மூதறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை கலந்துகொண்ட மறக்க முடியாத நிகழ்ச்சிகள்




1976 மே 22ம் நாளன்று வட்டுக்கோட்டைத் தீர்மானமாகிய தமிழ் ஈழத்தீர்மானத்தை துண்டுப் பிரசுரமாக சட்ட விரோதமாக தமிழர் விடுதலைக் கூட்டணி விநியோகித்தது. இந்த சட்ட மறுப்பு இயக்கத்தில் தள்ளாத வயதிலும் கலந்துகொண்டார் தந்தை செல்வா.



அண்ணா சமாதியில் மலர் வளையம் வைக்கும் செல்வா




சென்னை சட்டக்கல்லூரியில் பேசுகிறார் மூதறிஞர்




1972ல் தமிழகம் சென்றிருந்தபோது கோகலே மண்டப வரவேற்புச் கூட்டத்தில் செல்வாவுக்கு டாக்டர் இரா. சனார்த்தனம் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.




அமரர் திருச்செல்வத்தின் பூதவுடலுக்கு அஞ்சலிசெலுத்துகிறார் செல்வா.



மறைந்த இந்திய முஸ்லிம் பெருந்தலைவா காயிதே மில்லத்துடன், தமிழ் ஈழத் தந்தை




பெரியார் ஈ.வே.ரா.வும் பெரியவர் செல்வாவும்




அமரர் ஜீ.ஜீ.யின் பூதவுடலுக்கு செல்வா அஞ்சலி செலுத்திய காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தமிழகத் தலைவர்களுடன் பெரியவர்



முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு. வி; வி. கிரியுடன் மூதறிஞரும், திருமதி செல்வாவும் பேசிக்கொண்டிருக்கின்றனர்.




தமிழ் நாடு முன்னாள் ஆளுனர் கே. கே. ஷாவுடன்



1972ல் தமிழகம் சென்றிருந்த மூதறிஞருக்கு நாவலர்நெடுஞ்செழியன் பொன்னாடைபோர்க்கும் காட்சி





காங்கேசன்துறை இடைத்தேர்தலில் செல்வா ஈட்டிய வெற்றியை தமிழகம் கொண்டாடியது.



ஜவஹர்லால் நேருவுடன் கை குலுக்குகிறார் தந்தை



சிலம்புச் செல்வர் ம. பொ. சியுடன்

சென்னையில் 1975ல் நடைபெற்ற மூதறிஞர் செல்வா பிறந்த நாள் விழாக் காட்சிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழும் இடமெங்கணும்

# கடையடைப்பு, துயரம், கறுப்புக்கொடிகள்

## 'ஓ'வென்று அழுதுபுலம்பினர் கூட்டணித் தலைவர்கள்!

## தமிழ்ஈழத்தின் தேசபிதாவுக்கு நாடு முழுவதும் அஞ்சலி!

35 நாட்கள் நினைவு இழந்த நிலையில் யாழ் மருத்துவமனையின் 16ம் இலக்கவார்டில் காலனுடன் போராடிக்கொண்டிருந்த தமிழ் ஈழத்தின் தேசபிதா மூதறிஞர் செல்வா அவர்கள் 26-4-77 செவ்வாய்க்கிழமை இரவு 9-45 மணிக்கு காலமானார் என்ற துயரச் சேதி கிடைத்ததும், தமிழ் பேசும் மக்கள் இடிவிழுந்தவர்கள் போலத் துடித்துப்போனார்கள். தமிழர் விடுதலைக்கூட்டணியின் முன்னணித் தலைவர்கள் 'ஓ'வெனக் கதறியழுதனர்; தமிழர் வாழும் இடமெங்கணும் கறுப்புவெள்ளைக்கொடிகள் உயர்த்தப்பட்டு, கடைகள் பூட்டப்பட்டு துக்கம் அனுட்டிக்கப்பட்டது. தாயைப் பிரிந்த கன்று போல தமிழ் சமுதாயம் துடிதுடித்துக் கதறுகிறது!

குலையாத உறுதியுடனும், குன்றாத வைரநெஞ்சுடனும் முப்பதாண்டுகளாக தமிழ் சமுதாயத்தை விடுதலைப் பாதையில் நடைபோட வைத்த தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் 23-3-77ல் நினைவு இழந்த நிலையில் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 35 நாட்களாக சிகிச்சை பெற்று வந்ததும் அவரை பிழைக்க வைக்க யாழ்ப் பாணத்து டாக்டர்கள் அனைவரும் கண்துஞ்சாது ஓயாது ஒழியாது சிகிச்சை அளித்து வந்ததும், தெரிந்ததே. டாக்டர் கப்ராலும் கொழும்பிலிருந்து சென்று இருதடவைகள் தந்தை செல்வாவுக்கு தலையில் ஆப்ரேஷன் செய்தார். சென்றவாரம், உலகப் பிரசித்திபெற்ற டாக்டர் ராமமூர்த்தியும் சென்னையிலிருந்து வந்து தலைவர் செல்வாவை பார்வையிட்டுச் சென்றார்.

டாக்டர்களும், தாதிமாரும், ஏனைய வைத்திய அதிகாரிகளும் எவ்வளவோ முயற்சியெடுத்தும் காலன் வென்று விட்டான். தமிழினத்துக்காகவே வாழ்ந்த தந்தை செல்வாவின் உயிர் அவரது அருமை மனைவி திருமதி செல்வநாயகமும், மகன் திரு. சந்திரகாசனும் அருகிலே இருக்க 26. 4. 77 செவ்வாய் இரவு யாழ் மருத்துவமனையில் அமைதியாகப் பிரிந்தது.

தந்தையின்மரணச்செய்தி கேட்டதும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலகத்திலிருந்து 'மே தின' ஊர்வலம் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்த "தனது அரசியல் வாரிசு" என தந்தை செல்வாவின் திருவாயால் பிரகடனப் படுத்தப்பட்ட நாவலர் அமிர்தலிங்கம் அவர்களும், அங்கிருந்த கூட்டணியின் ஏனைய தலைவர்களும், மேதின ஏற்பாடுகளை பூரணமாக ரத்து செய்து விட்டு, மருத்துவமனைக்கு ஓடோடி வந்தனர். திருமதி அமிர்தலிங்கம் துடித்துக் கதறினார்.

தந்தையின் பூதவுடலை மருத்துவமனையிலிருந்து பொறுப்பேற்ற திரு. சந்திரகாசன், முழுமூச்சுடன் தங்களாலியன்றளவு தந்தை செல்வாவைக்காப்பாற்ற 35 நாட்களாக இரவு பகலாக பாடுபட்ட டாக்டர்கள் தாதிமார்களின் சேவையை மறக்கமுடியாது என்றார். அத்துடன், "இதோ உங்கள் நம்பிக்கைச் சொத்து" என்று கூறி, பெரியவரின் பூதவுடலை கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கத்திடம், அவர் ஒப்படைத்த போது, "பெரியவரின் பூதவுடலுக்கு மாத்திரமல்ல; அவரது கொள்கைக்கும் நாங்களே நம்பிக்கைச் சொத்தாக விளங்குவோம்" என்று கூறியபடி பூதவுடலைப் பொறுபேற்றார்.

பெரியவரின் மரணச் செய்தி கேட்டதும், நாட்டின் நாலாதிசையிலிருந்தும் கொதிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அலைகடலென மக்கள் இலட்சம் இலட்சமாக யாழ்நகரில் திரண்டுகொண்டிருக்கின்றனர்.

மூதறிஞரின் பூதவுடல் உதயசூரியன் கொடியினாலும், தமிழரசுக்கட்சியின் கொடியினாலும் மூடப்பட்டு, 27-4-77 காலை 11 மணிமுதல் மாலை 6.00 மணிவரை தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த போது பல்லாயிரக்கணக்கான கட்சித் தொண்டர்களும், கூட்டணித்தலைவர்களும், பா. உ.க்களும், அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக தங்கள் இறுதி அஞ்சலியை தெரிவித்தனர். சர்வ, சமய பிரார்த்தனைகள் அங்கு இடம் பெற்றன. கூட்டணி அலுவலகத்தில் உதயசூரியன் கொடி தாழப்பறந்ததுடன் கறுப்புக் கொடியும் ஏற்றப்பட்டிருந்தது.

மாலை 6 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு அங்கு பொது மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து வெள்ளி இரவு தந்தை செல்வாவின் தெல்லிப்பளை இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும் தெல்லிப்பளையில் தந்தை செல்வா அடிக்கடி செல்லும் கிறிஸ்தவ தேவாலயத்தில் விசேட பூசை நடைபெறும். 30-4-77 சனிக்கிழமை காலை தெல்லிப்பழையிலிருந்து பூதவுடல் இறுதி ஊர்வலமாக காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கலுரைகள் நிகழ்த்தப்படும்.

### கொழும்பில் அனுதாப ஏடு!

கொழும்பில் மூதறிஞர் செல்வாவின் இல்லத்திற்கு வருவோர் தமது அனுதாபச் செய்திகளை எழுதிவிட்டுச் செல்வதற்கு ஓர் கையெழுத்துப் புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. இதில் பல வெளிநாட்டு தூதுவர்கள் வந்து கையெழுத்திடுவதுடன், தந்தைக்கு மௌன அஞ்சலியும் செலுத்தினர்.

## நாட்டை கிடுகிடுக்க வைத்த குடுகுடு கிழவர்

**=செல்லச்சாமி அஞ்சலி**

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா மறைவு குறித்து இ. தொ. கா பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லசாமி விடுத்த துக்கச் செய்தி.

மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் இறைவனடி எய்திவிட்டார். இந்நாட்டில் வாழும் தமிழின மக்களெல்லோராலும் ஓர் தந்தையாக மதிக்கப்பட்டு "செல்வா" என்ற செல்லப்பெயரால் பாசத்தோடு அழைக்கப்பட்ட தனிப்பெருந் தலைவர் அவர், எலும்புந்தோலுமாக தள்ளாடித் தள்ளாடி நடந்த அவரின் உள்ளமோ வைரம் வாய்ந்த ஒன்றாகும், இந்நாட்டிலே தமிழினம் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்ற லட்சியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தன் வாழ் நாளெல்லாம் செயலாற்றியவர் அவர், கொண்ட லட்சியத்துக்காக சத்தியத்தை முன் வைத்து சாத்வீக முறையில் போராட்டங்கள் பலவற்றை வழிநடாத்திச் சென்ற அந்தக் குடு குடு கிழவர் செயலில் இறங்கிய பொழுதெல்லாம் இந்த நாடு கிடு கிடுத்தது, என்பதை எல்லோரும் நன்கறிவர்.

பாரதத்தில் விடுதலைப் போரை வழி நடத்திய மகாத்மாவின் பால் ஆங்கிலேய மக்கள் மனக்கசப்புக் கொள்ளாமல் மரியாதை காட்டிய தன்மைபோல், இந்நாட்டுப் பெரும்பான்மை மக்களும் செல்வாவின்பால் காட்டிய அன்பு அவர் கொண்ட காந்திய கொள்கையின் பிரதிபலிப்பேயாகும். அத்துடன் உருவத்திலும் உள்ளத்துக் கொள்கையிலும் அவர் அண்ணல் காந்தியை நினைவூட்டிய காரணத்தாலேயே ஈழத்துக் காந்தியென இந்நாட்டிலே அவர் பெயர் பெற்றார்.

மலையக மக்களின் பிரச்சினையையும் தமிழின வாழ்வுப் பிரச்சினைகளில் ஒன்றாக மக்கள் முன் முதல் முதலில் எடுத்து வைத்த தமிழ்த் தலைவர் அவர் என்பதை நன்றிப் பெருக்கோடு மலையகத் தமிழினம் நினைவு கூருகிறது.

இந்நாட்டின் குடியரசுச் சாசனம் வகுக்கப்பட்ட பொழுது தமிழினம் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப் பட்டதால் தன் பாராளுமன்றப் பதவியையே துறந்து மக்கள் முன் மறு தேர்தலுக்கு நின்ற மாட்சியை நாம் பார்த்தோம். அதன் பின் தனியாட்சியே தமிழரின் தன்மானம் காக்கும் எனத் துணிந்து தனி நாடு கோரிக்கையை மக்கள் முன் வைத்த துணிவுமிக்க செயலையும் கண்டோம்.

தன் உயிர் கவரவந்த காலனோடு அவர் சென்ற ஒரு மாத காலமாக நடத்திய போராட்டம் அவர் உள்ளத்தின் உறுதிக்கு ஒரு சான்றாகும், அவர் உடல் மறையலாம் அவர் உள்ளத்தில் கொண்ட லட்சியங்கள் லட்சோபலட்சம் உள்ளங்களிலே கொளுந்துவிட்டு எரிய ஆரம்பித்துவிட்டது, அந்த விடுதலைப் பெருந்தீயை இனி யாராலும் அணைத்துவிட முடியாது.

அவர் கொண்ட லட்சியங்களுக்குத் தங்களை அர்ப்பணம் செய்து முன்னேறுவதே அவருக்கு நாம் செய்யக் கூடிய நன்றிக்கடனாகும் உயிரோடு வாழ்ந்த செல்வாவை விட மறைந்து மக்கள் உள்ளங்களிலே ஒளிரும் செல்வா பலமிக்கவர் என்பதை உலகுக்கு எடுத்து ஓதுவோம். அன்று [illegible] பட்டும்.

வீணையின் தந்தி அறுந்ததோ
விடுதலைப்பேரிகை ஓய்ந்ததோ
சேனையின் பெருந்தலை சாய்ந்ததோ
செல்வமே எம்குலத் தந்தையே
ஆணையிட்டோம் எம் தலைவனே
அண்ணலுன் அடியே தொடருவோம்.



Brownson Industries
பிரவுண்சன் இண்டஸ்ரீஸ்
கொழும்பு-12

"ஒலிவ் ஸ்நானப் பவுடர்"
எண்ணெய் முழுக்குக்கு சிறந்த ஒலிவ் ஸ்நானப் பவுடரை வாங்கி உபயோகியுங்கள்.
ஒரு மில்க்வைற் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணையா ஜோதி தந்தை செல்வா

தமிழரின் ஜோதி அணைந்து விட்டது; தமிழரின் ஒரேயொரு கலங்கரை விளக்கம் சாய்ந்து விட்டது; தியாகச்சுடர், சாந்த மூர்த்தி ஈழத்தமிழரின் ஈடு இணையற்ற ஆத்மஜோதி காலனால் அபகரிக்கப்பட்டுவிட்டது. உரிமைகள் இழந்து, நாதியற்றவர்களாகத் திகழ்கின்ற நம்மவர்கட்கு காமீகனாகத்திகழ்ந்த தந்தை செல்வநாயகம் இயற்கை யெய்திவிட்டார்.

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் இங்கு காலடி வைத்தனர்; அவ்வேளை தமிழருக்கென தனிராச்சியம் இருந்தது; ஒல்லாந்தர் வந்தனர்; தனித்தமிழர் இராச்சியம்—யாழ்ப்பாண அரசு அடிமைப்பட்டது; என்றாலும், ஒரே அரசியலமைப்பின் கீழ் நாம் அடிமைகளாகவில்லை. சிங்களவர் நமது உரிமைகளை நசுக்கவில்லை, அவர்களின் கீழ் அடிமைகளாக நாம் வாழவில்லை. ஆங்கிலேய ஆட்சியில் கூட அப்படியான அவல நிலை நமக்கு, ஈழம் வாழ் தமிழருக்கு ஏற்படவில்லை. ஆனால் ஈழவளநாடு சுதந்திர தேவியை அணைக்கும் பொழுது, தமிழர்கள் இந்நாட்டின் ஆளப்படும் இனமாக மாற்றப்பட்டனர்; சிங்களவர் ஆளும் இனமாக்கப்பட்டனர்.

சுதந்திர இலங்கை சோல்பரி அரசியல் திட்டத்தை ஏற்றது; ஆனால், சோல்பரி அரசியல் திட்டத்தை தமிழர்கள் எதிர்த்தனர்; ஒற்றையாட்சியின் சின்னமான சோல்பரி அரசியல் திட்டத்தை எதிர்த்தவர்கள் பலர்; ஆனால், அவ்வரசியல் திட்டத்தின் தீமைகளை தீர்க்கதரிசனமாக உணர்ந்து எதிர்த்தவர் தந்தை செல்வா அவர்களே. சோல்பரி அரசியல் திட்டத்திற்கு மாற்றுத் திட்டத்தையும் அளித்தவர் தந்தை செல்வா அவர்களே.

சிங்கள ஆட்சி தமிழர்களுக்கு செய்த, செய்ய உத்தேசிக்கக் கூடிய சதிகளை கண்கூடாக்கண்ட ஒரே தலைவன் ஈழத்துக்காந்தி உயர் திரு செல்வநாயகம் அவர்களே.

சுதந்திரம் பெற்ற இலங்கையில் இருவகைப்பட்ட தமிழர்கள் இருந்தார்கள்; ஒருவகையினர் இந்திய வம்சாவளியினர்; மற்றவகையினர் ஈழம் வாழ் தமிழர். இருவகையினரும் பிரஜா உரிமை பெற்றவர்களே. இவ்விரு இனங்களையும் சிங்கள அரசு இல்லாது ஒழிக்கத் திட்டம் தீட்டினர். முதலாவது வகையினரை சட்டங்கள் மூலமாகவும் இரண்டாவது வகையினரை திட்டமிட்ட அரசாங்கக் குடியேற்ற திட்டத்தினாலும் அழிக்க முற்பட்டனர்.

இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் இலங்கை பாராளுமன்றத் தேர்தல் சட்டம் இன்னுமின்னோரன்ன சட்டங்களால் இந்திய வம்சாவளியினரின் பிரஜாவுரிமையைப் பறித்தனர். குடியேற்றத் திட்டங்களினால் ஈழத் தமிழரின் நிலங்களைப் பறித்தனர்.

சுதந்திரம் பெற்ற இரண்டு வருடங்களுக்குள் சிங்கள அரசின் கொடூரக் கரங்கள் தமிழர்களின் குரல்வளைகளை நெரிக்கத் தொடங்கின. இக்கொடூர சதிகளை கண்ணுற்ற தீர்க்கதரிசியான தந்தை செல்வா அவர்கள் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து தமிழரசுக்கட்சியை ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத் தொன்பதாம் ஆண்டு டிசம்பர் மாதம் பெற்றெடுத்தார்.

தந்தையின் அரிய தொண்டினை, தீர்க்கதரிசனத்தை அறியாத நம்மவர்கள், 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் தந்தையைத் தோற்கடித்தனர்; ஆனால் நாலு வருடங்களின் பின் தந்தையவர்களது அரசியல் ஞானத்தை உணர்ந்த நாம் அவரை எமது சக்கரவர்த்தியாகவே வைத்திருந்தோம். 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரை தமிழர்களின் முடிசூடா மன்னனாகத்திகழ்ந்தவர்.

1948 ஆம் ஆண்டே தமிழர்களுக்கு எதிராக நிகழக்கூடிய, சிங்கள அரசாங்கங்களினால் நடாத்தப்படக்கூடிய சதிகளை தந்தை அவர்கள் திட்டவட்டமாகக் கண்டார். தந்தையின் தீர்க்க தரிசனத்திற்கு இதோ ஒரு சான்று.

"Sir, the Hon. Prime Minister made a comparison with the descendants of the Portugese and English. Without being offensive to anybody I wish to say this: Their numbers do not portend any danger to anybody plitically. The only communities which are large enough like the Tamils, the Indians and the Muslims. which cause fea .

**சட்டத்தரணி செ. வே. விவேகானந்தன்**

It is such bodies that the Hon. Prime Minister wants to hit. He is not hitting us now directly. But when the language question comes up, which will be the next one to follow in this series of legisla tion. we knew where we stand Perhaps, that will not be the end of it. But whatever that my be, this bill is a piece of legislation which is not based on the highest principles on which the differences and difficulties of intercommunal problems have to solved, and I oppose it firstly on that ground..."

"போர்த்துக்கேயர், ஆங்கிலேயர் ஆகியோர் சந்ததிகளுடன் பிரதமர் (டி. எஸ். சேனநாயக) ஒப்பிட்டுக் காட்டி இங்கு பேசினர். யாரையும் புண்படுத்தாமல் நான் கூறவிரும்புவது இது தான். அவர்களுடைய எண்ணிக்கை அரசியல் வீதியாக யாருக்கும் அபாயம் விளைவிக்ககூடிய நிலையில் இருக்கவில்லை. தமிழர்கள், இந்தியர்கள், முஸ்லிம்கள்போன்ற சமுதாயங்களில் எண்ணிக்கையே உங்களுக்கு அச்சத்தை ஊட்டுகிறது - இப்படியான சமுதாயங்களைத்தான் கனம் பிரதமமந்திரி அழிக்கவிரும்புகிறார்! அவர் இப்போது எங்கள் மீது நேரடித்தாக்குதல் நடத்தவில்லை. ஆனால் இந்த மசோதாவை அடுத்து மொழிப்பிரச்சினை கிளம்பும் போதுதான் நாங்கள் எங்கே நிற்கின்றோம் என்பது எங்களுக்குத்தெரியும். இருந்தபோதிலும், அத்துடன் விஷயம் முடிந்துவிடாது. அது எப்படியெனில் இனங்களிடையே உள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய உயர்ந்த கொள்கைகளின் அடிப்படையில் இந்தமசோதாகொண்டு வரப்படாததால் இம்மசோதாவை நான் எதிர்க்கிறேன்"

இலங்கைப் பிரஜாவுரிமை சட்டத்தின் மீது நடந்த விவாதத்தின் போது, 10-12-48 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் தந்தை அவர்கள் மேற்கண்டவாறு தீர்க்கதரிசனத்துடன் கூறினார்.

தனிநாடே எமது விமோசனம் என்றுணர்ந்த அவர்கள கட்சிகள் பல இருப்பின் கொள்கைகள்பலதோன்றும என எண்ணினர்: தமிழர்கள் யாவரும் ஒரே கொடி ஒரே கட்சி ஒரிரு கொள்கையின் கீழ் முன்னேறவேண்டும் என்று சிந்தம்கொண்டார்.

"எண்ணியதை எண்ணியாங்
கெய்துவர்
எண்ணியர் திண்ணியராகப்
பெறின்"

வள்ளுவர் வாக்கு. தனிநாடு வேண்டுமென்று எண்ணியவர் திண்மையாளன் ஒற்றுமைப்பட வேண்டுமென எண்ணியவர், திண்மையாளன். அதனால், அவர் எண்ணிய வண்ணமே தமிழர் யாவரும் ஒரு கொடிக்கீழ அணிதிரண்டனர்.

—12-ம் பக்கம் பார்க்க



அவசரகாலச் சட்டத்தை மீறி தனிநாடு கோரும் சுவரொட்டிகளை தந்தை செல்வா ஒட்டும் காட்சியை படத்தில் காணலாம்.

## கவிஞர்கள் கண்ட செல்வா

### தமிழினத் தனித்தலைவன்

சத்தியாக் கிரகி யாகினன் சட்ட
மறுப்பினல் இனப்புகழ் காத்தான்
புத்தியி லாரின் சித்திர வதைக்குள்
பொன்னுடல் புண்படச் சகித்தான்
சத்தியத் தின்ஒரு சோதனை ஆன (அக்)
கடுஞ்சிறை வாசமுங் கழித்தான்
சித்தமே நிறையுஞ் சுதந்திர சத்தி
தெளிவிலே பொன்னொளி பூத்தான்.

சிதறிக் கிடந்த தமிழியக் கங்கள்
சேர்ந்து உரிமைப் போர்தொடர்ந் தாலே
அதர்மம் அழியும் தமிழர சாட்சியும்
அமையும் எனவே அண்ணலும் எண்ணினன்
புதிதாய்த் தமிழினச் சுதந்திர ஈழமும்
புலர்ந்திடத் தமிழர் கூட்டணிப் பேரவை
உதயமானது உத்தமத் தந்தையின்
உறுதியும் வென்றது; தாய்முகம் மலர்ந்தது.

"சுதந்திர இயக்கமே தமிழர் கூட்டணி
சுகந்தரும் விடுதலைத் தமிழர்பேரணி
நிதம்பல சத்தியப் போர்முறை யாலே
நிலமகள் மகிழ ஈழநா டாள்வோம்
பதியிலே தமிழினத் தனியர சாட்சி
பகலவன் போலெழு நாள்தூர மில்லை
இதுஎம தின்ப இலட்சிய மாகும்"—
ஈதெலாம் எந்தையின் தத்துவமாமே.

**சக்தீபாலையா**

### சிங்கத் தமிழ் மகன்

'சேர்ந்து செயல்பட வாரும்' என்றேமொழி
செப்பிய நாயகமே—கை
தேர்ந்த தமிழ்த் தலை வோனெனப் பேர்பெறும்
செல்வ (நந்) நாயகமே
சோர்ந்து கிடந்தவர் தோள்களித் தார்அவர்
சொற்பொழி வன்மையிலே—எது
தேர்ந்திடினும் தமிழ் ஈழ நிலத்தினிலே
நின்று நிலைபெறுமே.

வாழிய சிங்களம் வாழிய செந்தமிழ்
வாழிய நாயகமே
வாழிய வாழிய ஈழத் தமிழ்க்குலம்
வாழியஎந் நாளிலுமே
ஆழியும் வானும் அரும்புவி யாவையும்
ஆர்கதிர் வெண்மதியும்
வாழிய காலமும் செல்வ (நந்) நாயகம்
வாழிய வாழியவே.

**கவியரசு கண்ணதாசன்**

### ஈழக் காந்தி

ஈழத்தின் அரசியலை எண்ணிப் பார்த்து
எந்தமிழர்க் கோர் தந்தை ஈழக் காந்தி
கோலத்தை நினைவினிலே கொண்டு வந்து
கொஞ்சம்போற் சிந்தனையிற் குளிக்கப் போனேன்......
ஆழத்தை நான் கண்டேன் அடடா மக்கள்
ஆயிரமாய்க் கூடுவது தமிழென் பாளின்
தாலிக்குப் பழம்பெருமை தருதற் காமோ?
தமிழரசே உன் கூட்டம் வெல்க வெல்க.

**காசி ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்பதாண்டுகள் தமிழ் சமுதாயத்துக்காக
# ஓயாது உழைத்த செம்மல்

### தந்தை செல்வாவுக்கு சிவசிதம்பரம் அஞ்சலி!

'தமிழ் இனத்தின் அன்புத் தந்தை தமிழ் மக்களுடைய ஒற்றுமையின் சின்னம். அண்ணல் காந்தி வழி நின்று சத்தியப் போர் தொடுத்த வீரன் மறைந்து விட்டார். மேலும் ஆறு ஆண்டு வாழ்வேன். தமிழ் ஈழம் காண்பேன் என்று அவர் சொன்ன சொற்களைக் கேட்டு இறுமாப்பெய்தியிருந்த நம்மை ஆருத் துயரில் விட்டு மறைந்து விட்டார். முப்பது ஆண்டுகள் தன்னுடைய பொருள், சுகம், நேரம், சக்தி அத்தனையையும் தமிழ் இனத்துக்காக அர்ப்பணித்து தமிழினத்தின் நிகரற்ற தலைவராக விளங்கினார். தமிழினம் உரிமை பெற அண்ணல் காந்தி காட்டிய வழியில் சட்டமறுப்பியக்கங்களில் தானே முதல் தொண்டனாக நின்று சிறைவாசம் அனுபவித்த தியாகச் செம்மலவர். தள்ளாத வயதிலும் எல்லா இயக்கங்களிலும் முன்நின்று உழைத்து மற்றத் தொண்டர்களை ஊக்குவித்த பெருந்தலைவர். தான் கொண்ட இலட்சியத்தை அடையும் வரையும் எதற்கும் தயங்காது உழைத்த கர்மயோகி தமிழ் இனத்தை காலன் வஞ்சித்துவிட்டான்.



ஆறு மாதங்களுக்குள் எமது இரு பெருந் தலைவர்களை இழந்தோம் மூன்றுவது தலைவனையாவது விட்டுவைப்பான் என்று எண்ணினோம் பிரார்த்தித்தோம். மூன்றும் முறையும் விதி சதி செய்துவிட்டது. பெரியவரின் மறைவு எங்குமோர் சூனியத்தை ஏற்படுத்திவிட்டது. எங்கள் மனங்களில் எல்லாம் ஒரு வெறுமையை ஏற்படுத்திவிட்டது. ஆனால் இப்படியான ஒருவருடன் பழகினோம் என்ற பெருமை தான் எமக்குத் தெம்பைத் தருகின்றது. அந்தத் தெம்பில் இருந்து ஒரு உறுதியும் பிறக்கின்றது. அவர் உருவாக்கிய ஒற்றுமையை பேணிக்காப்போம். அந்த ஒற்றுமையை பாவித்து அவர் கொண்ட இலட்சியமான தமிழ் ஈழத்தைக் காண்போம்.

—இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபரும் அ. இ. த. காங்கிரஸ் தலைவருமான திரு. மு. சிவசிதம்பரம் தனது இரங்கற் செய்தியில் கூறியுள்ளார்.

## அன்புத் தந்தையே! உம் வழி தொடர்வோம்!

### அமிர்தலிங்கம் சத்தியப்பிரமாணம்!

'அலை கடலில் திசைதெரியாது தத்தளிக்கும் தமிழினத்துக்கு கலங்கரை விளக்கமாக இருந்து வந்தவர் எம் தலைவர் தந்தை செல்வா. எதிர்ப்புக்களைக் கண்டு கலங்காது, தோல்விகளைக்கண்டு துவளாது உறுதியுடன் அரசியலில் எதிர்நீச்சல் போட்டவர். அரசியலில், நேர்மை, வீரம், தியாகம் இம் மூன்றுமே அவரது தனி முத்திரைகள். நேர்மையே அவரது கேடயம். அவரது நிழலில் வளர்ந்த சிறிய மரங்கள் நாம். அப் பெரிய நிழலை திடீரென இழந்து விட்டதால் கொதிக்கும் வெயிலைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறோம். கலங்கரை விளக்கம் அணைந்ததால், இருட்கடலில் சிக்கி திசைதெரியாது தவிக்கிறோம். ஆனாலும், இந்த இருளினூடே ஓர் ஒளி தெரிகிறது கலங்கரை விளக்கமாக திகழ்ந்த தந்தை செல்வா, துருவ நட்சத்திரமாக ஜொலிக்கிறார். அவரை நம்பி பின் தொடர்ந்த எங்களுக்கு இதன் ஒளி இனி வழி காட்டும். சத்தியநெறியே அவர் வழி. அந்த வழியை பின் தொடர்வோம். அவரது ஆத்மா எங்களுடன் எப்போதும் நிற்கும். அவர் பொன்னுடல் மீது ஆணை! தமிழ் ஈழத்தை அமைத்தே தீருவோம்! அன்புத் தந்தையே இது சத்தியம்!

—இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபரும். தந்தையின் அரசியல் வாரிசுவுமான நாவலர் அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மூதறிஞரின் இளமைப் பருவம்....

—2-ம் பக்கத்தொடர்

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்!"

இந்தத் துடிப்பான கவிதை எண்ணம் பாரதியின் உள்ளத்தில் வெடித்திடத் தொடங்கிய அந்தப் புரட்சிப் பொழுதில் தான் வீரத் தாய்போல் பாரதி கனவு கண்ட விடுதலைப் பெண்போல் தன்னந்தனிப்பெண்ணாக மூன்று குழந்தைகளோடு கடல் கடந்து கப்பலின் பயணம் செய்தாள் அன்னம்மா.

### அன்னையின் வீரமும் உறுதியும்

செல்வாவைப் பிரசவித்த வல்லமை அவளல்லவா? வீரமும் உறுதியும் அந்த மகா அன்னையின் ஆத்மாவில் குடியிருந்தன. இறக்கைகளால் குஞ்சுகளைத் தழுவிக்கொண்டே தலை நிமிர்ந்து கம்பீரமாக நீந்திச் செல்லும் இனிய வாத்துப்பறவையைப் போல் அந்தக் கப்பலில் குழந்தைகளும் தானுமாக அன்னம்மா பயணம் இயற்றினாள்.

யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் சில சங்கடங்களைச் செல்வாவின் குடும்பம் சமாளிக்கவேண்டியிருந்தது. குழந்தைகள் மூவரும் மலாயாவில் பிறந்ததால் பிரஜா உரிமை எடுப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன. தகுந்த காரணங்களைக் காட்டி அன்னம்மா எப்படியோ தன் பிள்ளைகளை ஈழத்துக் குடி மக்களாய்ப் பதிவு செய்து கொண்டாள். ஆம்—அன்று குடி உரிமை அற்றவராகக் கருதப்பட்ட செல்வாதான், பின்பு, இலங்கை வாழ் தமிழ்ப் பழங்குடி மக்கள் உரிமைக்காகப் போராடும் அதே வேளையில்— "கள்ளத் தோணிகள்" எனக் கருதப் பட்டு ஈழத்தே உள்ளம் உடைந்து துடிக்கும் குடியுரிமையற்ற பல இலட்சம் தென்னுதமிழகத் தீந்தமிழருக்காகவும் போராடி நின்றார்!

தழும்பு தாங்கியவனே காயப்படுகிறவனைக் கவனிக்கிறான். அப்படித்தான் சிந்தை நொந்த இந்தியத் தமிழர் கண்ணீர் துடைப்பாரானார் தந்தை செல்வா.

1903ம் ஆண்டில் ஒரு நாள் ஐந்துவயதான செல்வாவை அழைத்துச்சென்று தெல்லிப்பளைத் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டாள் அன்னம்மா. பள்ளி வாழ்க்கை அரும்பிற்று.

### கொல்லனின் பட்டறை!

அது ஒரு சின்னப் பள்ளிக்கூடம். சாதாரணமான கொல்லனின் பட்டறை ஒன்றைப்போல் அப்பள்ளி காட்சியளிக்கும். அங்கேதான் யாரையும் துன்புறுத்தாத— ஆனால் துன்பப்படும் யாரையும் காப்பாற்றப் போராடுகிற 'செல்வா' என்ற ஆயுதம் தயாராயிற்று. செல்லப்பா என்ற கொல்லரே செல்வா என்ற ஆயுதத்தை வடிக்கத் தொடங்கினார்.

செல்லப்பா ஆசிரியர் என்றால் அவர்தான் தெல்லிப்பளைத் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குத் தலைமை ஆசிரியர். செல்லப்பா ஆசிரியர்தான் அப்பள்ளிக் கூடத்தில் துணை ஆசிரியர். செல்லப்பா ஆசிரியர்தான் அந்தப் பள்ளிக் கூடத்துக்கு எல்லாமும் ஆன ஒரே ஓர் ஆசிரியர்! 'அந்தக் காலத்தில் பெரும்பாலான பள்ளிக்கூடங்கள் இப்படித் தான் இருந்தன. ஐந்து வகுப்புக்கள் உள்ள எங்கள் பள்ளிக்கூடத்தில் அந்த ஒரு வாத்தியார் பட்டபாட்டை இப்போது நினைத்தாலும் சிரிப்பாக இருக்கிறது. அவர் முதலாம், வகுப்பில் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கும்போது ஐந்தாம் வகுப்பில் மாணவர்கள் கூத்தடித்துக் கொண்டிருப்பார்கள்' என்று கூறுகிறார் தந்தை செல்வா.

செல்லப்பா வாத்தியாரின் குரலுக்கு ஒரு தனி மதிப்புண்டாம். ஆரிடமோ அடி வாங்கி'ஐயோ அம்மா'என்று கத்துகிற மாதிரி செல்லப்பா வாத்தியாரின் குரல் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒலிக்குமாம். மாணவர்களைச கட்டுப்படுத்த அவர் பெரும் பாடுபடுவாராம். மாணவர்களும் நேரிலே அவருக்கு அஞ்சி மரியாதையாக அடங்குவார்களாம்.

### அறிவுக்கு அத்திவாரம்!

பழைய காலத்தில் ஆசிரியர்கள் தங்களை முழுமையாக அழித்து, மாணவர்களை முழுமையாக வளர்த்து எடுத்தார்கள். செல்லப்பா ஆசிரியர் அப்படிப்பட்ட ஒருவரே! தியாகத்தின் சிகரம் எனும் அந்தப் பெரிய வாத்தியாரிடம்தான் செல்வா அகரம் எனும் முதல் எழுத்தைப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு 'குழந்தைப் பெரும் பிறவி' செல்லப்பா வாத்தியார் என்னும் தெளிந்த மனிதரிடம் தன் அறிவுக்கு அத்திவாரம் போட்டுக் கொண்டது.

ஞானம் என்பது மகான்களோடு கூடப் பிறப்பது. செல்வாவின் மனத்துள்ளே தன்னுடைய ஞானத்தைச் செல்லப்பா வாத்தியார் நுழைத்தபோதும் செல்வாவின் சொந்தஞானம் தனித்துப்பிரகாசித்துக்கொண்டே இருந்தது.

செல்வா என்ற அந்தச் சிறுவன் பள்ளியிலும் வீட்டிலும் தன்பாட்டில் ஏதாவது கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தான். தனக்குள்ளேயே இனிய கனவுகளை வளர்த்து மயங்கினான் அந்த ஐந்து வயதுக் காரன்!

### ஒரு சுவையான கதை

செல்வாவின் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் [illegible] சிறந்த சுவையான நிகழ்ச்சி ஒன்றினைத் தாய் அன்னம்மா பின்பு அடிக்கடி பிறரிடம் எடுத்துக்கூறி மகிழ்வாள் அது ஒருசுவையான கதையே

ஈழத்தின் பழம்பெரும் முருகன் கோயில்களில் ஒன்றான மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை அது. தெருவெல்லாம் பக்தர்கள் திரள்திரளாய்ப் போவதும் வருவதுமான காலம்.

ஆடி அமாவாசை இருள் அழகு இராக்காலத்தில் கந்தன் திருவிழா ஆடம்பரமாக நிகழும். மாவிட்டபுரத்தான் அமாவாசைப்புனிதப்பொழுதில் பூத்தேரில் உலாவந்து கீரிமலைக் கடலில் தீர்த்த மாடுவான். எளிய குறத்தி மணவாளனின் அருள் பொழியும் திருமுக தரிசனத்தில் மகிழ்ந்தெழுந்து அடியார் கடல் ஆர்ப்பரிக்கும் கோலத் திருக்காட்சியே மாவிட்டபுரத்தான் கோவில் திருவிழா!

ஈழத்தின் பல்திசைகளில் இருந்தும் அடியார்கள் எழுந்தருளி மாவிட்டபுரம் நேர்த்திக்கடன் தீர்த்து அகமகிழ்வர். இறைவன் மனிதனுக்கு வழங்கிய பேராற்றல்களான கலைகளால் இறையடியார்களைக்குளிர்விக்கத் தமிழகத்திலிருந்து நாதஸ்வரதவில் வித்துவான்களும் இசை மேதைகளும் வருவதுண்டு. அந்தக் காலம் யாழ்ப்பாணத்தின் சிந்தைக்கினிய காலமாகத் திகழும்!

செல்வாவின் சிற்றூரான தெல்லிப்பளையில் இருந்து மாவிட்டபுரம் ஏறத்தாழ மூன்றுமைல் தொலைவில் இருக்கிறது. சுற்றியுள்ள ஊர்களில் இருந்து திருவிழாக் காலத்தில் காவடிகள் புற்றீசல்போல் புறப்பட்டு, வீதிதோறும் ஆடி. வாழ்வின் மாயைகள் எனும் போலிச் சிறகுகள் கழன்று விழ-ஆன்மா புனிதப்பட உருகி அழுது செல்லும் காட்சி— உள்ளத்தைத் தொடுவதாகும். அப்படித்தான் அன்றும் ஒரு காவடிக் கூட்டம் தெல்லிப்பளை வழியே மாவிட்டபுரக்கோவிலுக்குப்போய்க்கொண்டிருந்தது.

### பெரிய பக்திக் கூட்டம்

ஈசனிடம் செல்லும் ஈசல்கள் ஆடுகின்றன. ஒருபெரிய பக்திக் கூட்டத்தின் தித்திக்கும் தெய்வத்தமிழ்த் தேன் பாடல்கள் எல்லாவற்றையும் மிஞ்சி அந்தக் காவடிக் கூட்டத்துக்கு முன்னால் தமிழகத்தில் இருந்து வந்த பிரபல நாதஸ்வர வித்துவான் ஒருவரின் கானாமிர்த எழுசுரங்கள் காற்றிலே கனிந்து மழைத் துளிகளாய்ப் பொழிகின்றன...

மாவிட்டபுரம் நோக்கிச் செல்லும் அந்தக் காவடி அடியார் கூட்டத்தில் நாதஸ்வர வித்துவானின் காலடிகளைப் பக்தியோடு தொடர்ந்தபடியே ஐந்து வயதுப் பாலகன் ஒருவன் தன்னையும் மறந்து கைகளால் தாளம் போட்டுக்கொண்டு செல்கிறானே. அவன் யார்? எல்லோரும் அவனைப் பார்க்கிறார்கள். யாருக்கும் அவனை தெரியவில்லை,

தெல்லிப்பளைச் சிற்றூரைத் தாண்டிவிட்ட அக்காவடிக் கூட்டத்தில் ஒருவர், 'இது நாதஸ்வர வித்துவானோடு கூட வந்த குழந்தையோ? ஞானத்தோடு ஒழுங்காகத் தாளம் போடுகிறதே!' என்ற விமர்சனங்களைப்பற்றி எந்தக்காலத்திலும் கவலைப்படாமல் தன் மனதுக்கு இதமானதை எப்போதும் செய்யும் குழந்தை அது. அப்போதும் நாதஸ்வர ஓசையில் முழுமையாய் மயங்கித் தாளமிட்ட பிஞ்சுக்கைகளோடு தங்கக்கிண்ணம் உருள்வது போல் அது, அது பாட்டில் போய்க் கொண்டே இருந்தது.

### கலங்கிய தாயின் கண்கள்

காவடிக் கூட்டம் மாவிட்டபுரம் கோயில்வரை வந்துவிட்டது. கலங்கிய கண்கள் கொண்டாள் ஒரு தாய். அக்கூட்டத்தினுள் பரபரப்போடு நுழைந்தாள்: 'என் மகன் இருக்கிறானா?, என்று அவள் பலதடவை

—12-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதறிஞரின்..

—11-ம் பக்கத் தொடர்

கள் கேட்டுக்கொண்டாள். பின்பு நாதஸ்வரத்தின் பின்னே நடைபோடும் அந்தக் குழந்தையைக் கண்ணீர் மல்க எட்டிப் பிடித்து, 'இங்கே வா' என்று வெளியே இழுத்து வந்து அந்த 'மகா ரசிகனுக்கு' இரண்டு அடிகள் கொடுத்தாள் அவள்!

யார் அந்த மகாரசிகன்? செந்தமிழ் இசையில் மயங்கி நாதஸ்வர வித்துவானின் பைந்தமிழ் அடிகளைத் தொடர்ந்த அந்த ஐந்து வயது இரசிகமணி யார்? தெல்லிப்பளையில் இருந்து அன்னையிடம் சொல்லாமல் தெருவழியாகப் போன காவடிக் கூட்டத்தின் நாதஸ்வர ஓசையால் இழுபட்டு மாவிட்டபுரம் வரை வந்து அன்னையால் தேடி அலையப்பட்டு, அன்னையிடம் இருந்து அடியும் வாங்கிய அந்த இசைப்பித்தன் யார்? அவர் தான் செல்வா!

ஆம்! முத்தமிழில் ஒரு தமிழாம் இசைத் தமிழில் முகைப்பருவத்திலேயே மயங்கி, தித்தித்த அத்தேனிசை நாதசுரத்தில் தன்னைப் பறிகொடுத்த செல்வா, பின்பு முத்தமிழும் காக்கும் முழுத் தலைவரானார்.

இசைத் தமிழில் செல்வாவுக்கு எப்போதுமே ஒரு தனி மதிப்புண்டு. பிற்காலத்தில் செல்வா தமிழிசையை முறையாகக் கற்கவும் தவறவில்லை. "எனக்கு இராகம் தாளம் எல்லாம் தெரியும். ஆனால் தமிழினத்தின் எதிரிகள் பாடும் இராகத்துக்குத் தாளம் போட மட்டும் எனக்கு எப்போதுமே தெரியாது!" என்று நகைச்சுவையோடு கூறினார் செல்வா.

## அணையா ஜோதி..

—10-ம் பக்கத்தொடர்

எமது இலட்சியத்தை நோக்கி நடைபோடும் வேளையிலே எமது ஆத்மஜோதி மறைந்து விட்டது. பல கட்சிகள் பல கொள்கைகளை தழுவிய எம்மவர்களை ஒரே அணியில் நிற்பாட்டிய நம் தலைவன் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டான். தந்தையின் கட்டளைகளை ஏற்று நடைபோட்டு தனயன்கள் 'தனிநாட்டுக் கொள்கைக்குப்' போராடாது 'தொகுதி'ப் போராட்டங்கள் நடத்தும் இழிநிலை கண்டு கண் வடித்தாரோ? அதனாற்றான் கண்ணுறங்கி விட்டாரோ? தந்தையே! கண்ணீர் மல்க கேட்கின்றோம் 'அவர்கட்கு' என்ன சொல்லிச் செல்கின்றாய்?

விரைவில் வெளிவருகிறது

மா. குலேந்திரனின்

**'தந்தை செல்வா'**

தந்தையின் வாழ்க்கையில் கடந்த பல விறுவிறுப்பான விபரங்களுடனும், படங்களுடனும் பிரதிகட்கு

**யாழ்-சட்டநிலையம்
71 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.**




**பாவியுங்கள்**

**அன்றும்**

**இன்றும்**

**என்றும்**

மக்கள் மத்தியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நீலம்

**ரோயல் நீலம்**

எமது மற்றும் பிரபல தயாரிப்புகள்

ரோயல் ஜெலி கிறிஸ்டல்
ரோயல் கஸ்டட் பவுடர்
ரோயல் பேக்கிங் பவுடர்
ரோயல் கோன் பிளவர்

தயாரித்து விற்பனை செய்பவர்கள்

**சிவா இண்டஸ்ட்ரிஸ்**

112 - 1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11

**செல்லமகால்** 9-வது வாரம்

முத்துராமன், சுஜாதா, ஸ்ரீகாந்த், பத்மப்ரியா, மனோரமா, ஜெயச்சந்திரன், எம். என். ராஜம்,

— நடித்த —

எஸ், எஸ். கே. பிலிம்ஸாரின்

# வாழ்ந்து காட்டுகிறேன்

2-வது வாரம்

**கெயிட்டி**

சிவாஜி கணேசன், சௌகார் ஜானகி, வி. கே. ராமசாமி, உஷாநந்தினி, எம். ஆர். ஆர். வாசு

— நடித்த —

விஜயவேல் பிலிம்ஸாரின்

# மனிதனும் தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மன் கலர்)

**றீகல்** [மட்டுநகர்] 6-வது வாரம்

எம், ஜி. ஆர். ராதா சலுஜா -நடித்த

# இதயக்கனி

**கிங்ஸ்லி**

சிவாஜி கணேசன் — தேவிகா நடித்த-

**அன்னை இல்லம்**

விரைவில்

# திருவருள் (கலர்)

**வெலிங்டன்** 7-வது வாரம் (யாழ்நகர்)

முத்துராமன், சுஜாதா, பத்மப்ரியா, சுருளிராஜன், மனோரமா, ஜெயச்சந்திரன் எம்.என். ராஜம், பானுமதி நடித்த-

# வாழ்ந்துகாட்டுகிறேன்

21-வது வாரம்

**கெப்பிட்டல் - விஜயா** (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, சந்திரகலா நடித்த

# உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

**லிடோ** (யாழ்நகர்) 2-வது வாரம்

ரவிச்சந்திரன், லதா நடித்த

# சொர்க்கத்தில் திருமணம் (கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12, பண்டாரநாயகா வீதி, 194ஏ, இலக்கத்தில் 1977-ம் வருடம் மே மாதம் 1-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.